# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



## எனக்கு வழிகாட்டி, என்னை நடத்தியருளும்

சங்கீதம் 31:3


THE TAMIL DISTRICT COUNCIL OF THE SIAG

March - April 2024
Volume : 64

ஆண்டு சந்தா ₹ 120/-
Issue : 2

# மத்திய CA வாலிபர் முகாம் – 2024












ஆசிரியரிடமிருந்து........!

# வழிநடத்தும் கர்த்தர்



"உன்னை வழிநடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே" (ஏசாயா 48:17).

நம்முடைய கர்த்தர் நம்மை வழிநடத்துகிற கர்த்தர். வேதம் முழுவதும் தேவன் எப்படி தேவ மனிதர்களையும், தேவ ஜனங்களையும் வழிநடத்தினார் என்பதை வாசிக்க முடியும். இந்த செய்தியில், நம்முடைய வாழ்க்கையில் தேவ வழிநடத்துதலின் அவசியம் குறித்தும், தேவன் எவ்விதம் நம்மை வழிநடத்துகிறார் என்பது குறித்தும் சுருக்கமாக பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## 1. தேவ வழிநடத்துதலின் அவசியம்
## The MUST of God's Guidance

வாழ்க்கையின் பலவிதமான சூழ்நிலைகளில் (குடும்ப சூழ்நிலை, பொருளாதார சூழ்நிலை, ஊழிய சூழ்நிலை) நாம் தடுமாறும்போது, வழி தெரியாமல், செய்வது இன்னதென்று அறியாமல் கவலைப்படுகிறோம். ஆகவேதான் தீர்க்கதரிசி, 'மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்' என்று கூறுகிறார் (எரே.10:23). இத்தகைய தடுமாற்றம் நிறைந்த வாழ்வில் தேவனுடைய வழிநடத்துதல் நமக்கு மிகவும் அவசியம். இல்லையேல் நாம் வழிதப்பி, தேவத் திட்டத்தை விட்டு விலகி சென்றுவிடுவோம் (ஏசாயா 53:6). நம்முடைய கர்த்தர் நல்ல மேய்ப்பனாக நம்மை வழிநடத்துகிறவராய் இருக்கிறார் (சங்.23:3). தாவீதைப்போல, "கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதித்து, செவ்வையான பாதையிலே என்னை நடத்தும்" (சங்.27:11) "உமது நாமத்தினிமித்தம் எனக்கு வழிகாட்டி, என்னை நடத்தியருளும்" (சங்கீதம் 31:33) என்று நாமும் ஜெபிப்போமானால் கர்த்தர் நம்மையும் நடத்துவார்.

## 2. தேவன் எவ்வாறு வழிநடத்துகிறார்?
## The MANNER of God's Guidance

தேவனுடைய வழிநடத்தும் விதத்தை வேதம் பலவிதங்களில் நமக்கு தெரிவிக்கிறது.

### நித்தமும் நடத்துவார்:

"கர்த்தர் நித்தமும் உன்னை நடத்துவார்" (ஏசாயா 58:11).

நம்முடைய கர்த்தர் நம்மை வாழ்நாள் முழுவதும் வழிநடத்த வாக்குப்பண்ணியிருக்கிறார். அவர் நித்தமும், தினமும் நடத்துவார் (ஏசாயா 58:11). இஸ்ரவேல் ஜனங்களை 40 ஆண்டுகள் இரவும் பகலும் அவர்கள் முன்சென்று வழிநடத்தினார் என்று வேதம் கூறுகிறது (சங்.78:14; நெகே.9:12,19; யாத்.13:21). இந்த தேவன் சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார் என்றும், முடிவு பரியந்தம் நடத்துவார் என்றும் சங்கீதக்காரன் கூறுகிறார் (சங்.48:14;73:24).

### நேர்வழியில் நடத்துவார்:

"என்னை நேர்வழியாய் நடத்தி வந்த தேவனாயிருக்கிற கர்த்தரை ஸ்தோத்திரித்தேன்" (ஆதி.24:48).

ஆபிரகாம் தன் குமாரனாகிய ஈசாக்குக்கு பெண் தேடுவதற்காக தன்னுடைய ஊழியக்காரன் எலியேசரை அனுப்பியபோது ஆண்டவர் அவரை நேர்வழியாய் நடத்தி, ரெபெக்காளை தெரிந்தெடுக்க கிருபை செய்தார். ஆபிரகாமின் மனவிருப்பங்களையும் நிறைவேற்றினார். எலியேசரின் ஜெபத்தையும் கேட்டு ஆச்சரியமாய் காரியங்களை வாய்க்கப்பண்ணினார் (ஆதி. 24:12,48,56). நாமும் நமக்காகவும் நம் பிள்ளைகளுக்காகவும் தேவ வழிநடத்துதலை கேட்டு ஜெபிக்கும்போது கர்த்தர் நிச்சயம் நம்மையும் நேர்வழியாய் நடத்தி, காரியங்களை வாய்க்கப்பண்ணுவார்.

### முன்சென்று நடத்துவார்:

அவர்களை வழிநடத்த ..... அவர்களுக்கு முன்சென்றார் (யாத்.13:21) .

நம்முடைய கர்த்தர் நமக்கு முன்சென்று வழிநடத்துகிறவர். உலகத்திலுள்ள மேய்ப்பர்கள் ஆடுகளுக்கு பின்சென்று அதை ஓட்டி நடத்துவார்கள். ஆனால், நம்முடைய கர்த்தரோ நமக்கு முன்சென்று நடத்துகிறார் (உபா.1:30; 31:8; ஏசாயா 45:2; 52:12; மீகா 2:13). கோணலானவைகளைச் செவ்வையாக்கி, தடைகளை நீக்கி நமக்கு முன்சென்று பாதைக்காட்டி வழிநடத்துவார்.

### நித்திய வழியில் நடத்துவார்:

'நித்திய வழியிலே என்னை நடத்தும்' (சங்.139:24). 'நீதியின் பாதைகளில் என்னை நடத்துகிறார்' (சங்.23:3).

மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு. அதின் முடிவோ மரண வழிகள் என்று வேதம் கூறுகிறது (நீதி.14:12;16:25). தேவ வழிநடத்துதலை நாடாமல் நம்முடைய சுய வழியில் சென்றால் முடிவு விபரீதமாக இருக்கும். ஆகவே நாம் நம்முடைய சுயபுத்தியின்மேல் சாயாமல், கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து அவருடைய வழிநடத்துதலை நாடுவோம். அவர் நம்மை செவ்வையான பாதையில், சத்தியத்தின் வழியில், நித்திய வழியில் நடத்துவார் (நீதி.3:5,6; சங்.25:5).

## 3. தேவன் எவைகளைக் கொண்டு நம்மை வழி நடத்துகிறார்?
## The METHOD of God's Guidance

### 1. கர்த்தருடைய வார்த்தை:

தேவன் தம்முடைய வார்த்தையைக் கொண்டு நம்மை வழி நடத்துகிறார். கர்த்தருடைய வசனமே நம்முடைய கால்களுக்கு தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (சங்.119:105). வேதம்தான் இந்த பூமிக்குரிய நம்முடைய வாழ்க்கை பயணத்தில் நமக்கு வழிகாட்டியாகவும், திசை காட்டியாகவும் இருக்கிறது. நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும் இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று கர்த்தர் தம்முடைய வார்த்தையின் மூலம் உங்களோடு பேசி வழிநடத்துவார் (ஏசாயா 30:21). ஆகவே அனுதினமும் தேவனுடைய வார்த்தையை வாசித்து, தேவனுடைய சத்தத்தை கேட்க பழகுவோம்! என் ஆடுகள் என் சத்தத்தை அறிந்திருக்கிறது, செவிகொடுக்கிறது, எனக்குப் பின்செல்லுகிறது என்று இயேசு கூறினார் (யோவான் 10:3,4,27).

## 2. பரிசுத்த ஆவியானவர்:

தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு நம்மை வழிநடத்துகிறார். 'உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக' என்று தாவீது ஜெபிக்கிறார் (சங்.143:10). இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் தம்முடைய நல் ஆவியைக் கட்டளையிட்டு அவர்களை நடத்திவந்தார் (நெகே.9:19;20). சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் என்று இயேசு கூறினார் (யோவான் 16:13;14:26). பரிசுத்த ஆவியானவர் ஊழியத்தின் பாதையிலே அப்போஸ்தலர்களை வழி நடத்தினார் (அப்.10:19,20;13:2;16:7). சரியான தீர்மானங்களை எடுப்பதற்கு உதவிச் செய்தார் (அப்.15:29). நமக்கும் அப்படியே செய்வார்!

ஆவியானவர் ஒருபோதும் வசனத்திற்கு மாறாக வழிநடத்தமாட்டார். சிலர் இன்று ஆவியானவர் பேசினார் என்று கூறி தெளிவான வேத ஆலோசனைகளுக்கு விரோதமாக செயல்படுகின்றனர். இது தவறானது, ஆபத்தானது. மேலும் சொப்பனத்தின் மூலமோ, தீர்க்கதரிசனத்தின் மூலமோ உங்களிடம் யாராகிலும் பேசினால், வேத வசனத்திற்கு ஒத்திருக்கிறதா? என்று சோதித்துப் பார்க்க வேண்டும் (1 யோவான் 4:1).

## 3. பரிசுத்தவான்களின் ஆலோசனை:

பரிசுத்தவான்களின் ஞானமுள்ள ஆலோசனைகளைக் கொண்டும் தேவன் நம்மை வழி நடத்துகிறார். ஆலோசனையில்லாத இடங்களில் ஜனங்கள் விழுந்து போவார்கள்; அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும் (நீதி.11:14). ஆலோசனைக்குச் செவிகொடுக்கிறவனோ ஞானமுள்ளவன் (நீதி.12:15). ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்தில் ஞானமுண்டு (நீதி.13:10). ஆலோசனைக்காரர் அநேகர் இருந்தால் எண்ணங்கள் உறுதிப்படும் (நீதி.15:22;20:18). ஆலோசனைக்காரர் அநேகரால் ஜெயங்கிடைக்கும் (நீதி.24:6) என்றெல்லாம் வேதம் நமக்கு கூறுகிறது. ஆகவே ஒரு காரியத்தை செய்வதற்கு (வேத வசன வெளிச்சத்தோடுக்கூட) பெற்றோர்கள், ஆவிக்குரிய அனுபவமுள்ள போதகர்கள், மூத்த தேவப்பிள்ளைகளின் ஆலோசனைகளை கேட்பது வாழ்க்கையில் சரியான வழிநடத்துதலை பெறவும், நல்ல முடிவுகளை எடுக்க மிகவும் உதவிடும். ஜனங்களை பாரமின்றி நியாயம் விசாரித்து வழிநடத்த எத்திரோவின் ஆலோசனை மோசேவுக்கு மிகவும் உதவியாயிருந்தது (யாத்.18:14-20). நாத்தானின் ஆலோசனை தாவீதுக்கு சரியான நேரத்தில் கிடைத்தபடியால் சாலொமோனை தனக்கு பின் சிங்காசனத்தின் மேல் அமர்த்த முடிந்தது (1 இராஜா. 1:11-12).

## 4. சூழ்நிலைகள்:

தேவன் நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் சூழ்நிலைகளைக் கொண்டும் சில சமயங்களில் நம்மை வழிநடத்துகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் ஆசியாவின் சில பகுதிகளுக்கு சென்று ஊழியம் செய்ய தீர்மானித்திருக்கும்போது, தேவன் அங்கு செல்வதற்கான வாசல்களை அடைத்தார் (அப்.16:6-7). பவுலைக் கொண்டு ஐரோப்பா கண்டத்திற்கு சுவிசேஷம் செல்ல வேண்டும், சபை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று தேவன் திட்டம் வைத்திருந்தார் (அப்.16:9-40). தேவன் நாம் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு சில வாசல்களை அடைக்கிறார். சில வாசல்களை திறக்கிறார் (1 கொரி. 16:9)!

மேலும் சில நேரங்களில் நாம் கடினப்பட்டு தவறான வழியில் செல்லும்போது, சூழ்நிலைகள் மூலம் நம்மோடு பேசி சரிப்படுத்துகிறார். பிலேயாமை கழுதையைக் கொண்டு எச்சரித்தது இதற்கு உதாரணமாக இருக்கிறது (எண். 22:25-32).

ஆம், பிரியமானவர்களே, நம்முடைய தேவன் நம்மை இந்த வாழ்க்கைப் பயணத்தில் அற்புதமாக வழிநடத்த ஆயத்தமாயிருக்கிறார். நீங்கள் உங்கள் வழியை அவருக்கு ஒப்புவித்து, 'கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதித்து, செவ்வையான பாதையில் என்னை நடத்தும்' (சங்.37:5;27:11) என்று தினமும் ஜெபிப்பீர்களானால் கர்த்தர் நிச்சயம் நித்தமும் நடத்துவார்! நீங்கள் உங்களை அதிசயமாய் நடத்தி வந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள் (யோவேல் 2: 26)! ஆமென்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

## நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000.** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

---

## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். உங்கள் ஸ்தல சபை போதகர் மூலமாகவும் பிரதேச பொருளாளருக்கு அனுப்பி வைக்கலாம். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

### ஏ.ஜி. தலைமை அலுவலகம்

30, நாவலர் நகர், மதுரை-625 016. போன் : 0452 4200664



# ரிலாக்ஸ் பிளீஸ் ! Relax Please!


## Rev. J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்

Senior Pastor, Assembly of God Church, Vellore
Secretary-Tamil District Council of SIAG


மன அழுத்தம் இன்று வேகமாக பரவி வருகிற ஒரு தீவிர நோய், மன அழுத்த வியாதியினால் பாதிக்கப்படாத நபர்களே இல்லை என சொல்லுகிற அளவிற்கு இன்றைய நவீன கால சூழ்நிலைகள் அமைந்துள்ளன. ஒருவேளை நபர்களுக்கு நபர் இதன் அளவு வித்தியாசப்பட்டாலும் பாதிப்பு ஏதோ ஒரு விகிதத்தில் வருகிறது. மன அழுத்தத்தை தவிர்க்க முடியாது. ஆனால் அதின் பாதிப்புகளை கையாளும் விதத்தில் தீவிர பாதிப்புகள் ஏற்படாத வகையில் நம்மைக் காத்துக்கொள்ள முடியும். அநேக குடும்ப பிரச்சனைகளுக்கு மன அழுத்தம் ஒரு மிக முக்கிய காரணம். மன அழுத்தம் என்று கணிக்க முடியாத அநேக கணவன்-மனைவிகள் வேறு நபர்களால் தங்களுக்குள் சண்டையை வளர்த்துக் கொள்கிறார்கள்.

**அறிகுறிகள் :**

- செயல்களில் மந்த தன்மை.
- தனித்து இருக்க விரும்புதல்.
- மற்றவர்களோடு பேசுவதைத் தவிர்த்தல்.
- எதுவுமே செய்ய முடியவில்லை என்ற எண்ணம்.
- எதிர்மறையான சிந்தனைகள்.
- குறுகிய வட்டத்திற்குள்ளே பேசுதல், சிந்தித்தல்.
- எதற்கெடுத்தாலும் எரிச்சல், கோபப்படுதல்.
- எதையும் கவனித்து செய்ய முடியாத நிலை.
- சரீர பிரச்சனைகள் (அடிக்கடி தலைவலி, முதுகு வலி, வயிற்று பிரச்சனைகள்).
- அதிக சோர்வும், ஏன் வாழ்கிறோம் என்ற எண்ணங்களும்.

இதைத் தவிர இன்னும் அநேக அறிகுறிகளும் உண்டு. ஐயோ எனக்கு பிரச்சனை இருக்கிறது என்று பிரச்சனைகளையே யோசித்து, பேசிக் கொண்டிருக்கிறதை விட, அதைவிட்டு வெளியே எப்படி வருவது என்று சிந்திக்க வேண்டும். நமக்கு தேவையான அடிப்படையான சில தீர்வுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**1. நமக்குள்ளேயே தீர்வு உள்ளது என்ற நம்பிக்கை :**
**(Believe that solutions are at your hand)**

Dr.Minirith (Psychiatrist) நமக்குள்ளே Fight response¨ A in-built survival mechanism உள்ளது என கூறுகிறார். அதாவது வெளியே இருந்து வரும் பிரச்சனைகளை மேற்கொள்ள தேவையான சக்திகளை, மனநிலைகளை இயற்கையாகவே நம்முடைய சரீரம் பெற்றுள்ளது. இதைத்தான் நம்முடைய திராணிக்கு மிஞ்சி சோதனை வருவதில்லை என்பதை வேதம் தெளிவாக நமக்கு போதிக்கிறது.

தன்னுடைய பிரச்சனையை தீர்க்கும்படி எலிசாவை தேடி வந்த தீர்க்கதரிசியின் மனைவியாகிய அந்த விதவையைப் பார்த்து எலிசா கேட்ட கேள்வி, உன்னிடத்தில் என்ன இருக்கிறது என்பது தான். ஒரு குடம் எண்ணெய் என்று அவள் சொன்னபோது, அதை அடிப்படையாக வைத்துதான் அவளுடைய வாழ்க்கையில் இருந்த அதிதீவிர பிரச்சனைக்கு தீர்வு கொடுக்கப்பட்டது.

வெளியே இருந்து பிரச்சனைகள் வந்து நம்முடைய மனநிலையை பாதிக்கும்போது நமக்குள்ளே ஆண்டவர் ஒரு தீர்வை வைத்திருக்கிறார் என தீவிரமாக நாம் நம்பவேண்டும்.

### 2. சமநிலைப்படுத்தி வாழ பழகிக்கொள்ளுதல் : (Balance Priority System)

குடும்பம், வேலை, ஆவிக்குரிய வாழ்க்கை, திறமைகளை வளர்த்தல் போன்ற எல்லாவற்றிக்கும் சரியான நேரம் ஒதுக்கி வாழ பழகிக்கொள்ள வேண்டும். எப்போதுமே வேலை, வேலை என்றால் ஒன்று குடும்பத்தால் நமக்கு மனநிலை பாதிக்கப்படும். இல்லையென்றால், குடும்பத்தில் உள்ள யாருக்காவது மனநிலை பிரச்சனைகள் வரும். ஆண்டவரோடு செலவிடும் நேரங்கள், குடும்பத்தோடு செலவிடும் நேரங்கள், வேலைக்குக் கொடுக்கும் முக்கியத்துவங்கள் போன்றவற்றை கையாளுவதில் ஞானமாக இருக்க ஆண்டவரிடம் கிருபையை பெற்றுக்கொள்ள வேண்டும். அதிக Tension-ஐ தவிர்த்து சாதாரணமாக இருக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

### 3. தேவனோடு உள்ள தனிமை நேரத்தை முக்கியப்படுத்துதல் : (Give importance to Quiet time)

சரீர ஆரோக்கியத்திற்காக, மன பிரச்சனைகள் நீங்க யோகா (yoga)விற்கு செல்லும் கிறிஸ்தவர்களின் கூட்டம் இன்று அதிகம். யோகாவைவிட சிறந்த பயிற்சி வேதத்தை தியானிப்பதும், ஜெபிப்பதும், இதைவிட சிறந்த பயிற்சி உலகத்தில் வேறு எதுவுமில்லை. தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்பதை ஆழமாக விசுவாசிப்போமானால், பிரச்சனைகளை முதலாவது அவரிடம் கொண்டு வருவோம். தனிமை நேரத்தைக் குறித்து வைத்து முக்கியப்படுத்துங்கள்.

### 4. மனம்விட்டு பேச உண்மையான நண்பர்களை வைத்துக்கொள்ளுதல் : (Maintain a true friendship network for support)

மனம் விட்டு பேச, நாம் நாமாக இருக்க ஒரு சில உண்மையான நண்பர்கள் நமக்குத் தேவை. அது உங்கள் வாழ்க்கைத் துணையிடம் இருந்து ஆரம்பிக்கட்டும். பிள்ளைகளோடு நம்மைப் புரிந்துக்கொண்டிருக்கின்ற நல்ல நண்பர்களோடு நேரம் செலவழிப்பதும் மிகவும் அவசியம். நண்பர்கள் எதிர்பாலினராக இல்லாமல் இருப்பது மிகவும் அவசியம். உங்கள் முக்கிய பிரச்சனைகளை மனம்விட்டு வாழ்க்கைத் துணையிடம் பகிர்ந்து கொள்கிறீர்களா? என்ற கேள்விக்கு பதில் அளித்த நாடுகளின் பட்டியலில் முதல் 10 இடத்தில் இந்தியா இல்லை என்பது வேதனைப்பட வேண்டிய விஷயம். நம்முடைய நிறைகளை மட்டும் அல்ல, குறைகளையும் தைரியமாக சுட்டிக்காட்டும், நம்மை உண்மையாக நேசிக்கும், நம்முடைய வளர்ச்சியில் அக்கறைப்படும் நண்பர்களை பக்கத்தில் வைத்துக் கொள்ளுங்கள். மன அழுத்தம் காணாமல் போய்விடும்.

### 5. போதுமான அளவு ஓய்வும், சரீர பயிற்சியும் கொடுத்தல் : (Get sufficient Physical rest & sleep)

ஒரு சின்ன நடைபயிற்சி, முழு சரீரத்தையும் உழைக்க வைக்கும் ஒரு வேலை. பிள்ளைகளோடு கொஞ்சம் விளையாடும் நேரம். இரவில் ஆழ்ந்த தூக்கம், மதியம் ஒரு சின்ன ஓய்வு என்பதை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். தொடர்ந்து வேலை செய்யும்போது இடையே சரீரத்திற்குக் கொடுக்கும் ஓய்வு நம்முடைய மூளையை புத்துணர்ச்சி அடைய வைத்து சுறுசுறுப்பாக வேலை செய்ய வைப்பதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள். குறைந்தது 15-20 நிமிட சரீர பயிற்சி மிகவும் அவசியம். உங்கள் உணர்ச்சிகளைப் புதிதாக்கி உங்களை நன்றாக உணர வைத்து, இரத்த ஓட்டத்தை அதிகரித்து பெரிய மாயஜாலங்களை இந்த பயிற்சி செய்ய வைக்கும்.

### 6. உங்களுக்கு பிடித்த காரியங்களில் மனதைச் செலுத்துங்கள் : (Divert your mind to your interested events and things)

உங்களுக்கு மிகவும் பிடித்த சின்ன சின்ன காரியங்களை அவ்வப்போது செய்ய நேரம் எடுங்கள். சிறுவயதில் பொழுதுபோக்காக இருந்த நிறைய காரியங்களை வயதானால் விட்டு விடுகிறோம். இயற்கையாக உங்கள் மனம் விரும்புகிறதை கொஞ்சம் Serious ஆக

எடுத்து, அவைகளை செய்வதற்கு நேரம் எடுத்தால் நேரம் வீணாகிறது என்ற எண்ணம் வராது. மாறாக மன அழுத்தத்தை குறைக்க வழி செய்யும். அவ்வப்போது வேலைகளுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு, செல்போனை அணைத்துவிட்டு உங்கள் மனதைப் புதிதாக்கும் நிகழ்வுகளில் ஈடுபடுங்கள். குடும்பத்தோடு வெளியே செல்ல திட்டமிடுங்கள். பசுமையான பூங்காவிற்கு செல்வதோ, நல்ல இசையை கேட்பதோ, மன அழுத்தங்களை குறைப்பதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

### 7. நேர்மறையாக சிந்திக்க ஆரம்பித்தல் : (Think Positively)

பயங்களை புறம்பே தள்ள வேண்டும். கர்த்தர் நமக்கு பயமுள்ள ஆவியை தராமல், பலமும் அன்பும், தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். மன அழுத்தங்களை கொண்டு வரும் நபர்களை, சூழ்நிலைகளைக் குறித்து சிந்திப்பதை தவிர்த்து விடுங்கள். என் மீட்பர் இன்னும் உயிரோடிருக்கிறார். என்ற எண்ணங்களால் உங்கள் மனதை நிரப்புங்கள். ஆண்டவருடைய அனுமதி இல்லாமல் ஒன்றும் நடக்காது என்பதில் தீவிரமாயிருங்கள். நடப்பதெல்லாம் நன்மையாக மாறும். எதிர்மறையான சிந்தனைகள் நம்மை செயல் இழக்க வைத்துவிடும் என்பதை மறக்க வேண்டாம். நேர்மறையான வார்த்தைகள் நம்முடைய சுய மதிப்பை அதிகரித்து, வேலைகளை சுறுசுறுப்பாக செய்ய வைக்கும். என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு என அடிக்கடி சொல்லி பழகுங்கள்.

### 8. முடியாதவற்றை நாகரீகமாக இல்லை என சொல்லி பழகுதல் : (Learn how to say No)

அநேக நேரங்களில் வேலை ஸ்தலங்களில், குடும்ப உறவுகளில், சபைகளில் நம்மால் முடியாத அல்லது செய்வதற்கு நேரம் இல்லாத சூழ்நிலைகளில் ஒரு வேலை, பொறுப்பு கொடுக்கப்படுமாயின், நாகரீகமாக இல்லை என சொல்ல நமக்குக் கொஞ்சம் தைரியம் வேண்டும். சரி என ஒத்துக்கொண்டு நாம் செய்ய முயற்சிக்கும்போது வேறு எங்கேயோ Compromise பண்ண நேரிட்டு, தேவையில்லாத பிரச்சனைகளை உண்டுபண்ண வாய்ப்பிருக்கிறது. கடைசியாக இவைகள் மன அழுத்தத்தில் கொண்டுபோய் விடும். ஆகவே இல்லை என சொல்லி பழகுங்கள்.

### 9. உணர்ச்சிகளை வெளிக்காட்ட பழகுதல் : (Expressing our Emotions)

ஆண்டவர் கொடுத்திருகின்ற எல்லா உணர்ச்சிகளுமே நல்லவைகள் தான். ஆனால் அவைகள் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். சரியான நேரத்தில், விதத்தில், முறைகளில் வெளிப்படுத்தப்பட்ட உணர்ச்சிகள் மன அழுத்தங்களைக் குறைத்துவிடும். கோபமோ, எரிச்சலோ, அன்போ, கடிந்துகொள்ளுதலோ, அழுகையோ, சிரிப்போ, சந்தோஷமோ, வெளிப்படுத்தத் தயங்க வேண்டாம். உள்ளேயே அடக்கி வைப்பது தேவையில்லாத இடங்களில், நேரங்களில் வெளிப்பட்டு அழுத்தத்தை அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது.

### 10. திருப்தியாக வாழ பழகுதல் : (Live with satisfaction)

பணமோ, பொறுப்போ, வேலையோ, பொருட்களோ, உறவோ, போதும் என்கிற மனநிலையோடு கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். இன்னும், இன்னும் என தேடிச் செல்லும்போது கூடுதல் வேலை, கூடுதல் உழைப்பு, கூடுதல் களைப்பு, கூடுதல் பணவிரயம், கூடுதல் நேரம் என எல்லாமே கூடும்போது மன அழுத்தமும் கூட வாய்ப்புண்டு. உயர வேண்டும் என்ற எண்ணம் தவறில்லை ஆனால் நமக்கென்று ஆண்டவர் வைத்திருக்கும் ஆசீர்வாதங்கள் தான் சிறப்பானவைகள் என்பதை கருத்தில் கொள்ளும்போது திருப்தியாக வாழப் பழகிக்கொள்வோம். கவலையோடு ஒருநாளும் படுக்கைக்குச் செல்ல வேண்டாம்.

ஆண்டவர் தாமே மன அழுத்தம் இல்லா வாழ்க்கை வாழ உதவி புரிவாராக.

# பாராளுமன்ற தேர்தலுக்காக ஜெபியுங்கள்



1. 543 தொகுதிகளிலும் தேவனுக்கு சித்தமானவர்கள், கர்த்தருக்கு பயந்தவர்கள், ஊழலற்றவர்கள் மற்றும் கிறிஸ்துவர்கள் தேர்ந்தெடுக்கப்பட.
2. தேர்தலில் கிரியை செய்து, தனக்கு சாதகமானவர்களை வெற்றி பெறச் செய்ய நினைக்கிற சாத்தானின் கிரியைகளையும், மந்திரம், பில்லி சூனியம், யாகங்கள் போன்றவைகளில் கிரியை செய்கிற அசுத்த ஆவிகள் நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில் சுட்டெரிக்கப்பட ஜெபிப்போம்.
3. தங்களுக்கு சாதகமானவர்களை ஆளுகையில் கொண்டு வர துடிக்கிற கார்ப்ரேட் நிறுவன முதலாளிகளின் சதி ஆலோசனைகள் அபத்தமாக்கப்பட ஜெபிப்போம்.
4. தேர்தலில் வெற்றி பெற மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால் நேடியாகவோ, மறைமுகமாகவோ கலவரங்களை தூண்டி அதின் மூலம் வாக்காளர்களை தங்கள் பக்கம் இழுக்க நினைக்கும் மனுஷீக வல்லமைகளை கட்டி ஜெபிப்போம்.
5. 90 கோடி வாக்காளர்களின் மனநிலையை, சிந்தையை ஆவியானவர் ஆளுகை செய்து தம்முடைய சித்தத்திற்கு நேராக அவர்களை நடத்த ஜெபிப்போம்.
6. பணத்திற்காகவோ, கட்சிக்காகவோ, மதத்திற்காகவோ, ஜாதிக்காகவோ, ஓட்டு போடாமல் தேச நலன் கருதி மக்கள் வாக்களிக்க ஜெபிப்போம்.
7. பொய் பிரசாரங்கள், போலி வாக்குறுதிகள், லஞ்சங்கள், மிரட்டல்களை நம்பி வாக்கு அளிக்காமல் உண்மையுள்ளவர்களுக்கு வாக்கு அளிக்க ஜெபிப்போம்.
8. வாக்காளர் அனைவரும் கடமை உணர்வோடு தவறாமல் வாக்கு அளிக்கவும், கள்ள ஓட்டுக்கள் போட முயற்சிக்கிற காரியங்கள் முற்றிலும் தடுக்கப்பட ஜெபிப்போம்.
9. தேர்தலை தலைமைதாங்கி நடத்தும் தேர்தல் ஆணையம் உண்மையாய், பாரபட்சமின்றி செயல்பட ஜெபிப்போம்.
10. மதசார்பற்ற நல்ல ஆட்சி தேசத்தில் அமையவும், தேச நலன் கருதி உழைக்கும் நல்ல பிரதமர் மற்றும் மந்திரிகள் ஆட்சிக்கு வரவும் ஜெபிப்போம்.

உன்னதமான தேவன் மனுஷரின் ராஜ்யத்தில் ஆளுகை செய்து,
தமக்குச் சித்தமானவனை அதின்மேல் அதிகாரியாக்குகிறார் (தானியேல் 5:21).



# இந்தியாவில் ஏஜி வேதாகமக் கல்லூரிகள்


**Rev. P.S. ராஜமணி**

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020


## பெத்தேல் வேதாகமக் கல்லூரி

1927 ஆகஸ்ட் 1ம் தேதி ஜான் பர்ஜஸ் என்ற அமெரிக்க ஏஜி மிஷனரி கேரளாவில் மாவேலிக்கரையில் இந்த வேதாகமக் கல்லூரியை ஆரம்பித்தார். அமெரிக்காவிற்கு வெளியே ஆரம்பிக்கப்பட்ட முதல் ஏஜி. வேதாகமக் கல்லூரி இதுதான். சில ஆண்டுகள் திருவனந்தபுரத்திற்கு மாற்றப்பட்டது. 1949 புனலூருக்கு மாற்றப்பட்டு நடந்து வருகிறது. மிஸ் கின், மிஸ் கிரேனர் என்ற இரண்டு ஏஜி மிஷனரிகளும் நீண்ட காலம் இங்கே ஊழியம் செய்தனர். பாஸ்டர் குஞ்சமன் பல ஆண்டுகள் முதல்வராயிருந்து ஊழியம் செய்தார். பின்பு போதகர் ஜான் தானிக்கல் முதல்வரானார். 1985 முதல் பாஸ்டர் பிலிப் முதல்வராகவும், இதைத் தொடர்ந்து பலர் முதல்வராயிருந்து ஊழியம் செய்து வருகின்றனர்.

## வடஇந்திய ஏஜி வேதாகமக் கல்லூரி

1924ல் பெண்களுக்கான ஓர் கல்லூரி பீகாரில் ஆரம்பிக்கப்பட்டது. பின்பு இது உத்ரபிரதேசத் திலுள்ள ஹர்துவாய் என்ற ஊருக்கு மாற்றப்பட்டு, 1960 முதல் ஆண்களும் படிக்க ஒழுங்கு செய்யப்பட்டது. 1968 முதல் போதகர் பி.சி.சாமுவேல் தலைமையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு ஏஜி வேதாகமக் கல்லூரி

1948ல் ஆலிவர் போத் என்ற மிஷனரி மதுரையில் இந்த கல்லூரியை ஆரம்பித்தார். அவருக்கு உதவியாக பாஸ்டர் எம். பெஞ்சமின் என்ற புகழ் பெற்ற போதகர் முதல்வராக பொறுப்பேற்று நடத்தி வந்தார். அதைத் தொடர்ந்து பல மிஷனரிகள் மிஸ் குயின், மிஸ் ஓகல் ஊழியம் செய்தனர். பாஸ்டர் சகரியா, பாஸ்டர். ராஜமணி, பாஸ்டர் ஜெயபாலன், பாஸ்டர். சாமுவேல்ராஜ், பாஸ்டர். ராஜசேகர், பாஸ்டர். எட்வர்ட் ஜெயஜோதி ஆகியோர் முதல்வராக இருந்தனர். தற்போது பாஸ்டர். சார்லஸ் முதல்வராக உள்ளார்.

## தென் ஆசிய வேதாகமக் கல்லூரி

பெங்களூரில் 1951ல் ஆரம்பிக்கப்பட்டது. ஆல்பிரட் கால்ஸ்டன் இதன் முதல்வராயிருந்து பணியாற்றினார். 1969ல் ஆண்ட்ரூ மெக்டர்மிட் என்ற மிஷனரி தற்போதுள்ள வளாகத்தை வாங்கி அங்கு கல்லூரியை மாற்றினார். பாஸ்டர். ஏ.சி. ஜார்ஜ், பாஸ்டர். ஐவன், பாஸ்டர். பிரவீன்குமார் தலைவராயினர்.

## கர்நாடகா வேதாகமக் கல்லூரி

1989ல் ஜான் சிபோல்ட் என்ற மிஷனரி பெங்களூரில் இந்த கல்லூரியை ஆரம்பித்தார். பின்பு டாக்டர் டி.சி ஜார்ஜ், பாஸ்டர் செல்வதாஸ் பொறுப்பேற்றனர்.

## சவுத் வெஸ்டர்ன் வேதாகமக் கல்லூரி

மகாராஷ்ட்டிராவில் 1953ல் ஜஜீனர் என்ற இடத்தில் சார்லஸ் ஆண்டர்சன் என்ற மிஷனரி இந்த கல்லூரியை ஆரம்பித்தார். பின்பு சாமி. ஜி. போர்டே, சாலமன் வாக்கர் போன்ற இந்திய போதகர்கள் தலைவராக பணியாற்றினர்.

**ஈஸ்டர்ன் இந்தியா வேதாகமக் கல்லூரி**

1974ல் நாகாலாந்திலுள்ள திமாப்பூரில் ஆரம்பிக்கப்பட்டது. பாஸ்டர். டி.என். லோத்தர் இதன் முதல் தலைவரானார். தொடர்ந்து பலர் பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர்.

**சென்ட்ரல் வேதாகமக் கல்லூரி**

1982ல் இது டெல்லியில் ஆரம்பிக்கப்பட்டது. தயாள் ஆலிவர் இதன் முதல் தலைவர். 1984 முதல் போதகர் ராபர்ட் ஜெயராஜ் முதல்வராக பணியாற்றி வருகிறார்.

**ஆந்திரா மாநில வேதாகமக் கல்லூரி**

1987ல் பெல்லாரியில் ஆரம்பிக்கப்பட்டது. பின்பு ஹைதரபாத்திற்கு மாற்றப்பட்டது. பாஸ்டர். ஜி.பீட்டர் இதன் முதல் முதல்வர். தற்போது போதகர் தீமோத்தேயு ராவ் முதல்வராயிருக்கிறார்.

**பண்டைன் வேதாகமக் கல்லூரி**

1986ல் மேற்கு வங்காள வேதாகமக் கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டது. மார்க் பண்டைன் என்ற மிஷனரி முதல்வரானார். பின்பு பண்டைன் வேதாகமக் கல்லூரி மாற்றப்பட்டு போதகர் சாலமன் வேங்க் என்பவர் தலைமையில் நடந்து வந்தது. இப்போது வேறு நபர்கள் நடத்தி வருகின்றனர்.

**சதர்ன் வேதாகமக் கல்லூரி**

1981ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் முளகுமூடு என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடந்துவருகிறது.

**பெய்த் வேதாகமக் கல்லூரி**

கேரளாவில் ராணி என்ற இடத்தில் 1986ல் ஆரம்பிக்கப்பட்டு போதகர் பாபு ஜார்ஜ் தலைமையில் நடைபெற்று வருகிறது.

**மவுண்டைன் வேதாகமக் கல்லூரி**

டார்ஜிலிங்-ல் கிளாடி பரோவா என்பவர் ஆரம்பித்து நடத்தி வருகிறார்.

**திருத்துவ வேதாகமக் கல்லூரி**

1993ல் கணக்கபிள்ளை வலசையில் பெண்களுக்காக ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது. சிஸ்டர் கொலீன் குயீன் இதை ஆரம்பித்தார். தற்போது பாஸ்டர். ஸ்டீவ் ஜெயராஜ் முதல்வராக செயல்படுகிறார்.

**மெட்ராஸ் வேதாகமக் கல்லூரி :** 1998ல் சென்னையில் ஆரம்பிக்கப்பட்டு போதகர் மோகன் தலைமையில் நடைபெற்று வருகிறது.

**திரித்துவ வேதாகமக் கல்லூரி, மலபார் :** 1994ல் கேரளாவில் உள்ள கன்னூரில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

**பண்டைன் இறையியல் கல்லூரி :** ஜார்கண்ட் மாநிலத்தில் ராஞ்சியில் 1988ல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. பாஸ்டர் ஜான் டாப்போ இதன் முதல்வராக பணியாற்றுகிறார்.

**சீஷத்துவ பயிற்சி நிலையம் :** 1997ல் பாட்டியாலா நகரில் (பஞ்சாப்) ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. பாஸ்டர் சாமுவேல் திலக் இதன் முதல்வர்.

**மேகாலயா வேதாகமக் கல்லூரி :** கி.பி 2000ல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

# A.G. தமிழ்நாடு வேதாகமக் கல்லூரி

(An ATA Accredited College)

மதுரை - 625 016

Email : agtbc1948madurai@gmail.com Website : www.agtbc.org

## I. Residential Studies (For Men only)

### 1. Master of Divinity (M.Div.)

**Medium** : English | **Duration** : 3 Years
**Eligibility :** Any Degree from Recognized University (10+2+3)
B.Th. Degree (ATA Accredited) with B+ or B Grade

### 2. Bachelor of Theology (B.Th.)

**Medium** : English and Tamil | **Duration** : 3 Years
**Eligibility** : +2 Pass (10+2)

### 3. Diploma in Theology (Dip.Th.)

**Medium** : Tamil | **Duration** : 2 Years
Eligibility: S.S.L.C. (X Pass)

## II. Modular Studies (For Men & Women)

### 1. Master of Divinity (M.Div.)

**Medium** : English | **Duration** : 3 Years
Eligibility: Any Degree from Recognized University (10+2+3)
B.Th. Degree (ATA Accredited) with B+ or B Grade
Men must be above 25 years. Women must have been married.

### 2. Bachelor of Theology (B.Th.)

**Medium** : Tamil | **Duration** : 3 Years
Eligibility: +2 Pass or Diploma in Theology (10+Dip.Th.) (ATA Accredited)
Men must be above 25 years. Women must have been married.

## III. Extension Studies

### 1. Diploma in Theology (Dip.Th.)

**Medium** : Tamil | **Duration** : 3 Years
Eligibility: S.S.L.C. (X Pass)

*Note : Men and Women with jewels are not admitted.*

கி.பி.2024-25-க்கான நிரப்பப்பட்ட விண்ணப்ப படிவம் வரவேற்கப்படுகின்றன.
1.06.2024 முதல் வகுப்புகள் ஆரம்பமாகும்.

---

**விண்ணப்ப படிவத்திற்கு**

**Download Application Form : www.agtbc.org**

---

தொடர்பு: ***Director of Admissions***

## AG Tamilnadu Bible College

**Bye Pass Road, Kalavasal, Madurai - 625 016.**
**Cell : 96982 55027, 88389 27937, Ph: 0452 2601940.**



# பிரசங்கி : ECCLESIASTES

## புத்தக அறிமுகம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University

**செய்யுள் ஆகமங்களும், ஞான இலக்கியங்களும்:**

யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு ஆகிய ஐந்து புத்தகங்களும் செய்யுள் ஆகமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அதில் யோபு, நீதிமொழிகள், பிரசங்கி ஆகியவை **ஞான இலக்கியங்கள்** என்றும் அறியப்படுகின்றன. செய்யுள் ஆகம வரிசையில் "பிரசங்கி" நான்காவது புத்தகமாகும்.

ஞான இலக்கியங்களுக்கு பிரசங்கி புத்தகம் வேதாகமத்தில் சிறந்த எடுத்துக்காட்டாகும். நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு ஆகிய மூன்று புத்தகங்களையும் சாலொமோன் ராஜா எழுதினான்.

**'உன்னதப்பாட்டு'** புத்தகத்தை தனது இளவயதிலும், நீதிமொழி புத்தகத்தை தனது நடுத்தர வயதிலும், "பிரசங்கி" புத்தகத்தை தனது அந்திய காலத்திலும் சாலொமோன் எழுதினான் என்று நம்பப்படுகிறது.

''சங்கீத புஸ்தகம்'' பாடல்களின் தொகுப்பு. ''நீதிமொழிகள்'' வாழ்க்கை நெறிமுறைகளின் தொகுப்பு. ஆனால் "பிரசங்கி புத்தகமோ" செய்யுள் வடிவில் எழுதப்பட்ட நீண்ட சொற்பொழிவு ஆகும்

**பிரசங்கியாகிய சாலொமோன் ராஜா:**

'பிரசங்கி' புத்தகத்தை ராஜாவாகிய சாலொமோன் எழுதினான். இதை இப்புத்தகத்தில் 1:1,16;2:4-9 ஆகிய வசனங்களிலிருந்து அறிகிறோம். இவன் தாவீது ராஜாவின் மகன்; எருசலேமில் ராஜாவாயிருந்தவன். எருசலேமில் அரசாண்ட எல்லா ராஜாக்களைக் காட்டிலும் சாலொமோன் ஞானம் மிகுந்தவன்; மகா புத்திசாலி. தனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் பெரியவனும், செல்வச் சீமானுமாயிருந்தான். இவனுடைய புகழ் அக்கால உலகமெங்கும் பரவியிருந்தது.

"பிரசங்கி" என்று இவன் தன்னை அழைப்பதினால்; இன்று உள்ளதுபோல் சபையில் கூடிவருவோருக்கு பிரசங்கித்தலை அது குறிக்கவில்லை. மாறாக, 'பிரசங்கி' என்பது ஞான வார்த்தைகளை ஒருங்கிணைத்து ஜனங்களுக்கு போதனை செய்வதைக் (Teaching) குறிக்கிறது.

சாலொமோன் தேவனை தரிசித்தவன், (1இரா.3:5). ஆனாலும் அவனது அந்திய நாட்கள் பரிதாபமானவைகளாகவும், கொடுமையானவைகளுமாயிருந்தன. இவன் தன் வாழ்க்கையின் மகிழ்ச்சிக்கு அதிக பொருள் சேர்த்தலும், ஐசுவரியத்தில் திளைத்தலுமே வழியென வாழ்ந்துவிட்டதுதான் அதற்குக் காரணம். எனவே மிகவும் ஏமாற்றமடைந்தான். சாலொமோனின் விக்கிரக ஆராதனை, உலக இன்பத்தில் மூழ்கி வாழ்ந்த வாழ்க்கை அனைத்தும் சேர்ந்து அவனை விரக்தியின் விளிம்பிற்கே கொண்டு சென்றுவிட்டன. அவனது ஆன்மீக வீழ்ச்சியினால் கர்த்தரையும் அவருடைய வார்த்தையையும்விட்டு உலகம்தரும் மகிழ்ச்சியைத் தேடினான்.

இப்படிச் சீரழிந்த வாழ்வு சாலொமோனுக்கு வெறுமையைத்தான் தந்தது. அதனால் பெருத்த ஏமாற்றமடைந்தான். கர்த்தரில்லாத செல்வத்தையும், வல்லமையையும், கனத்தையும், புகழையும், சிற்றின்பத்தையும் அளவில்லாமல் அனுபவித்த சாலொமோன் வெறுமையை மட்டுமே கண்டான். எல்லாவற்றையும் அனுபவித்த அவன், **''மாயை, மாயை எல்லாம் மாயை''** என்று ''பிரசங்கி'' புத்தகத்தில் எழுதிவைத்திருக்கிறான்.

**பிரசங்கி புத்தகத்தை சாலொமோன் எழுதக் காரணம் என்ன?**

"எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு. ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது'' (1கொரி.10:22) என்ற பவுல் அப்போஸ்தலனின் அனுபவத்துக்கும் சாலொமோனுக்கும் வெகுதூரமுண்டு. சாலொமோன் தெய்வபயமின்றி, தேவவசனத்துக்கு மாறாக அனைத்தையும் அனுபவித்துச் சீரழிந்துபோனான்.

அவன் வாழ்ந்து முடித்துவிட்ட அவனது வாழ்க்கை அவனுக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது. தனது வாழ்க்கையின் தவறான மாதிரியை எவரும் எடுத்துக்கொள்ளக்கூடாது; குறிப்பாக, இளைஞர்கள் தனது சீர்கெட்ட வாழ்க்கையின் மாதிரியில் வாழக்கூடாது என்பதை திட்டமாய்ப் போதிக்க விரும்பினான். தனது மரணத்துக்குமுன் அதைப் புத்தகத்தின் வாயிலாகப் தெளிவுறப் பதிவுசெய்து சென்றான். பிரசங்கியாகிய சாலொமோன் நான் செய்த தவறினை நீங்கள் செய்ய வேண்டாம் என்று எழுதிய எச்சரிப்பின் புத்தகமே **"பிரசங்கி"** ஆகும்.

**பிரசங்கி புத்தகத்தின் கருப்பொருள் வசனம்:1:3**

"சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன?". இதுவே இப்புத்தகத்தின் கருப்பொருள் வசனமாகும். தன்னுடைய வாழ்க்கையை முன்வைத்தே இக்கேள்விக்கு விடை காணமுயலுகிறான், பிரசங்கியாகிய சாலொமோன்.

**பிரசங்கி புத்தகத்தின் பொருளடக்கம்:**

1. சாலொமோனுக்குப் புரியாத புதிர், 1:1-11
2. சூரியனுக்குக் கீழே காணப்படும் தீமை (மாயை), 1:12-8:17
3. தேவனுடைய கரத்தில் ஒரு மனிதனுடைய வாழ்க்கை, 9:1-12:12
4. முடிவுரை அல்லது பொழிப்புரை, 12:13-14

'பிரசங்கி' புத்தகம் முழுவதிலுமிருந்து ஒத்த வசனங்களையும், கருத்துக்களையும் திரட்டி சாலொமோன் கண்ட ஆராய்ச்சியின் முடிவை மூன்று பகுதிகளாகப் பகுத்துப் பார்த்தல் பயனளிக்கும்.

**2.தேவனற்ற வாழ்க்கையின் யதார்த்தநிலை:**

சாலொமோனுக்கு தேவையான எல்லாம் இருந்தது. உலகப்பிரசித்திபெற்ற ஞானி அவன். எனினும் ஒருநாளில் அவன் மரிக்கப்போகிறான் என்பது நிச்சயம். தன்னுடைய குமாரர்கள் எப்படி ராஜ்யத்தை ஆளப்போகிறார்கள் என்று யாருக்குத் தெரியும்? தன் மக்களுக்கு என்ன நடக்கும் என்பதும் தான் அறியாத ஒன்றே; தனக்கும் என்ன நடக்கும் என்று சாலொமோனுக்குத் தெரியாது. **சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பயன் என்ன** என்ற கேள்வியுடன் சாலொமோன் போராடுகிறான்.

**"சூரியக்குக்கீழே"** என்ற சொற்றொடர் மட்டும் 29 தடவை இப்புத்தகத்தில் வருகிறது.

'சூரியனுக்குக் கீழே' என்பதின் பொருள் என்ன? இது தேவனைத் தவிர்த்து நாமாகச் செய்யும் செயல்களைக் குறிக்கிறது. நாம் காணக்கூடியது, தொடக்கூடியது, அனுபவிக்கக்கூடியது ஆகியவற்றை வைத்து உலகத்தை கணிக்க இயலாது.

சூரியன் உதிக்கிறது. மறைகிறது, மீண்டும் உதிக்கிறது. ஜீவ நதிகளாய்ப்பாயும் ஆறுகள் பாய்ந்தோடுகின்றன, ஆனால் ஒருபோதும் வற்றிப்போகிறதில்லை. நாம் அறிந்துகொள்ளத்தக்க புதிய தகவல்கள் நாள்தோறும் பெருகிக்கொண்டே செல்கின்றன, எனினும் மனம் அதினால் திருப்தியாவது இல்லையே!

எனவே, பதிலே இல்லாத வாழ்க்கை சக்கரத்தில் ஒரு மனிதனால் என்ன செய்ய முடியும்? இது மாயையும் மனதுக்குக் சஞ்சலமுமாயிருக்கிறது; அர்த்தமற்ற வாழ்க்கையாயிருக்கிறது.

சாலொமோன் எல்வளவுக்கதிகமாய் உலகத்தைப்பற்றிக் கற்றுக்கொண்டானோ அவ்வளவுக்கதிகமாய் அது புரிந்துகொள்ள முடியாததாயும் மனச்சோர்வடையச் செய்யும் உலகமாயும் அவனுக்கு மாறிற்று (1:8).

எனவே இந்தப் பிரச்சனைக்கு பிரசங்கியாகிய சாலொமோன் முடிவு காண முயற்சிக்கிறான்: வானத்தின்கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்கு தன் மனதைப் பிரயோகம்பண்ணினான், (1:13). இந்த ஆராய்ச்சியும் அவனுக்குப் பயன்தருவதாக இல்லை.

- "அதிக ஞானத்தினாலே அதிக சலிப்புண்டு; அறிவுபெருத்தவன் நோவு பெருத்தவன்" (1:18).
- இன்பமும் செல்வமும் திருப்தியளிப்பதில்லை, (2:10,11; 5:10).
- நாம் மரிக்கும்போது நமது கடின உழைப்பின் செல்வங்களை நம்மால் எடுத்துச் செல்ல இயலாது. (2:18,19; 5:13-17)
- நாம் மரித்தபின் இவ்வுலகில் விட்டுச்செல்லும் எல்லாம் அதனைச் சம்பாதிக்காத நமது பின்தலைமுறைக்கே உரிமையாகிறது, (2:18,19).
- அதனால் நமக்கு பலன் என்ன? பிரயாசமும் கடின உழைப்பும் உண்மையில் நம் ஆசைகளைப் பூர்த்தி செய்யாது, (6:7)
- நியாய ஸ்தலத்திலும் அநீதியே காணப்படுகிறது; மக்கள் நீதிக்குப் பதிலாக தீமையைக் கடைப்பிடிக்கின்றனர், (3:16; 4:1;5:8).
- கடவுளுக்குப் பயந்து நீதிமானாய் வாழும்போதுகூட கஷ்டங்கள் வருகிறது. அது மகிழ்ச்சியான வாழ்விற்கு உத்தரவாதமளிக்காது. (7:16).
- நீதி செய்தும் நன்மையடையாதிருக்கிற நீதிமான்கள் இருக்கிறார்கள். பொல்லாதவர்களும் பாவிகளும் சிலசமயம் வாழ்ந்திருக்கிறார்கள். நீதிமான்களும் துன்மார்க்கருக்கும் ஒன்றுபோல் சம்பவிக்கின்றதே!

மேற்கண்ட பலவற்றை அலசி ஆராய்ந்த பிரசங்கி, இவ்வுலகில் நாம் எப்படி வாழவேண்டும் என்பதை இரண்டாவது பகுதியாக விளக்குகிறான்.

**இப்படிப்பட்ட மாயையான உலகில் நாம் எப்படி வாழவேண்டும்?**

உலகம் ஏன் இப்படி இருக்கிறது? நாம் அதுகுறித்து என்ன செய்ய இயலும்? இதில் நாம் விளங்கிக்கொள்வது என்ன? என்று ஆராய்ந்து பார்த்த பிரசங்கி, ஒரு உண்மையைத் தெளிவுற விளங்கிக்கொள்கிறான். நீதியுள்ள தேவன் ஒருவர் இருக்கிறார் (8:12-13). **இந்த நீதியுள்ள தேவன் இருக்கிறார்** என்பதை உலகம் உணர்ந்து நடப்பதுபோல் தெரியவில்லை.

எனவே மனிதன் இவ்வுலகில் தன் வாழ்வில் என்னதான் செய்யமுடியும், எப்படித்தான் வாழமுடியும் என்பதை பிரசங்கி எடுத்துரைக்கிறான்.

மனிதன் கடவுளின் கரத்தில்தான் இருக்கிறான்; எனவே

- எண்ணெய்பூசி, குளித்து, நல்ல வஸ்திரங்களை உடுத்திக்கொள்; சாப்பிட்டு, குடித்து, சந்தோஷமாயிரு. உன் மனைவியுடன் நல்இல்லறத்தை அனுபவி, (9:7-9)
- கடினமாக உழைக்கவும், முடிந்தவரை ஞானத்தைப் பயன்படுத்து, (9:10,18).
- குறிப்பாக, நீ அதிகாரத்திலிருக்கையில் ஞானத்தைப் பயன்படுத்து; முட்டாள்தனமான செயல்களைத் தவிர்க்கவும். அதிகாரத்திலிருக்கிறவர்களிடத்தில் ஞானமாய் நடந்துகொள், (10:2,5-6,20).
- வாழ்க்கையில் உனக்கு வாய்க்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்து. அவற்றைத் தேடிச்செல். உன்னால் முடிந்தவரை வாழ்க்கையில் அனுபவி, (11:4, 8-10).

- உன் வாழ்க்கையில் தொடர்ந்து முன்னேறிச் செல்கையில் உன்னை சிருஷ்டித்தவர் யார் என்பதை நினைவில் வை, (12:1). இப்படி வாழ்க்கை நெறிகளை ஆராய்ந்து புத்தி சொல்கிறான், பிரசங்கி.

**3. எது சரியான வாழ்க்கை? 'பிரசங்கி' ஆராய்ந்து கண்டறிந்தவை:**

பூமிக்குரிய சொத்துக்களும், நிலபுலன்களும், தேவனில்லாத, தனிப்பட்ட விருப்பம் சார்ந்த இலட்சியங்கள் அனைத்தும் பயனற்றவையாகும். வாலிபர்கள் உலக இன்பங்களை அனுபவிக்கலாம்; ஆனால் தேவன் நிர்ணயித்த எல்லைகளைக் கடந்து அனுபவிக்கக்கூடாது, (11:9,10;12:1). உலகம் எப்படியிருக்கிறது என்று ஆராய்ந்து, நாம் அதில் எப்படி வாழவேண்டும் என்று ஆலோசனை தந்த 'பிரசங்கி' எல்லாவற்றுக்கும் முடிவுரையைச் சுருக்கமாக 12:13,14 வசனங்களில் தருகிறான்.

"காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக; தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே.

ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்".

பிரசங்கியின் கருத்துக்களை இப்படி விளக்கலாம்:

அநீதியும் வேதனையும் நிறைந்த இவ்வுலகில் எப்படி நடக்க வேண்டும்?

இவ்வுலகம் மாயையானது, இதில் பரிசுத்தமாகவும் தேவனுக்குப் பிரியமாகவும் வாழ்வது மிகக்கடினம் என நினைக்கலாம். தேவனும் இதை சரிபண்ணி நமக்கு அநுகூலமாக்கித்தர எதையும் செய்யாததுபோலவும் நமக்குத் தோன்றலாம். ஆனாலும் என்ன? நீங்கள் அவருக்குப் பயந்து வாழவேண்டியது உங்கள் கடமையன்றோ! அது நன்னெறி வாழ்க்கையாக அமையும். இதுவே பொழிப்புரையாக பிரசங்கிதரும் ஆலோசனை.

**'பிரசங்கி' புத்தகத்தில் என்னைக் கவர்ந்தது! பிர. 12:1-7:**

ஒரு மனிதனுடைய வயதுமுதிர்ந்த காலத்தையும் அதன் கொடுமைகளையும், அதன் முடிவாக நிகழும் மரணத்தையும் கற்பனையாக வடிவமைக்கிறான் 'பிரசங்கி'.

வாலிப வயதாயிருக்கும்போது, "வெளிச்சம் இன்பமும், சூரியனைக் காண்பது கண்களுக்குப் பிரியமாயிருக்கும்" (11:7).

ஆனால் மனிதனுக்கு இருளின் நாட்களும் வரும்,(11:8). தீங்குநாட்களும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று சொல்லும் நாட்களும் ஒருவனுக்கு வந்து நேரிடும். சூரியனும், வெளிச்சமும், சந்திரனும், நட்சத்திரங்களும் அந்தகாரப்படும், (12:1,2).

மனிதனுடைய வாழ்க்கையை ஒரு வீடாக சித்தரிக்கிற பிரசங்கி, அந்தவீடு ஒவ்வொரு பகுதியாக நிலைகுலைந்து அழிவதை வர்ணிக்கின்றான். யோபு 4:19;2கொரி. 5:1-2; 2பேதுரு 1:13 ஆகிய வேதபகுதிகளும் ஒரு மனிதனுடைய சரீரத்தை, வீடு, கூடாரம் என சித்தரிக்கின்றன. பிர.12:1-7 வேதபகுதிக்கு ஒவ்வொன்றாக விளக்கம் சொல்வோம்:

**12:3.**

- **வீட்டுக்காவலாளிகள் தள்ளாடி**=முதிர்வயதாகும்போது நமது கைகளும் கால்களும் தள்ளாட ஆரம்பிக்கின்றன.
- **பலசாலிகள் கூனிப்போய்**=நமது கால்களும், முழங்கால்களும், தோள்பட்டையும் பெலன்குறைவதால் நாம் சற்று கூன்விழுந்து நடக்கிறோம்.
- **எந்திரம் அரைக்கிறவர்கள் கொஞ்சமானதினால் ஒய்ந்து**=மூப்பினால் நமது பற்கள் ஒவ்வொன்றாக விழ ஆரம்பிக்கின்றன.
- **பலகணி வழியாய் பார்க்கிறவர்கள் இருண்டு போகிறதற்கு முன்னும்** = நமது கண்பார்வை மங்குகிறது.
- **எந்திர சத்தம் தாழ்ந்ததினால்** = பற்கள் குறைந்தால் உணவை மென்று சாப்பிட முடியவில்லை.

**12:4:**

- **தெருவாசலின் கதவுகள் அடைபட்டு**=காது சரியாய் கேட்கவில்லை, அல்லது பற்கள் இல்லாததால் 'வாயை' மூடிக்கொள்கிறோம். வெளிஉலக சத்தம் நமக்குக் கேட்பதில்லை.
- **குருவியின் சத்தத்துக்கும் எழுந்திருக்க வேண்டியதாகி**=சரீர அசதியாய் இன்னும் கொஞ்சம் தூங்கலாம் என விரும்பினாலும், அதிகாலையில் குருவிகளின் சத்தம் நம்மை எழுப்பிவிடுகிறது.
- **கீத வாத்தியக் கன்னிகைகளெல்லாம் அடங்கிப்போகாததற்கு முன்னும்** = நமது குரல் பெலவீனப்பட்டு 'கீச்' குரலில் பேசுகிறோம்

**12:5:**

- **மேட்டுக்காக அச்சமுண்டாகி, வழியிலே பயங்கள் தோன்றி** = படியேறவும் பயம், மேட்டில் ஏறிச்செல்லவும் இயலாது. (மின் தூக்கியை பயன்படுத்துகிறோம்). தெருவில் நடக்கும்போது தவறிவிழுந்துவிடுவோமோ என பயப்படுகிறோம்.
- **வாதுமைமரம் பூப்பூத்து** = வாதுமைமரப் பூக்கள் வெண்மையாயிருக்கும். நமக்கு வயதாகும்போது தலையில் முடி எஞ்சியிருந்தால், அவையும் வெண்மையா யிருக்கும்.
- **வெட்டுக்கிளியும் பாரமாகி** = கோடைகால முடிவில் வெட்டுக்கிளிகள் நடக்கமுடியாமல் கால் இழுத்து நகர்வதுபோல, நடக்கப்பெலனின்றி நாமும் கால்இழுத்து நடக்கிறோம்.
- **பசித்தீபனமும் அற்றுப்போகாததற்கு முன்னு**ம்=வயது செல்லும்போது பசியில்லாமல் போகிறது. இல்லற இன்பப்பசியும் இல்லாமற்போகிறது.
- **மனுஷன் தன் நித்திய வீட்டிற்குப் போகிறதினாலே, துக்கங்கொண்டாடு கிறவர்கள் வீதியிலே திரியாததற்குமுன்னும்** = நீங்கள் உங்கள் நித்திய வீட்டிற்கு செல்கையில் நீங்கள் விட்டுச்சென்ற பூமியில் உங்களுக்காக துக்கம் கொண்டாடுகிற மக்கள் ஏராளம்!

**12:6:**

- **வெள்ளிக்கயிறு கட்டுவிட்டு, பொற்கிண்ணி நசுங்கி** = என்பது விலையுயர்ந்த வெள்ளிக்கயிற்றால் பொற்கின்னத்தில் தொங்குகிற குத்துவிளக்கு கயிறு அறுந்து விழுந்ததால் உடைந்துபோகிறது. அப்படியே வாழ்க்கை என்ற விளக்கு ஒரு முடிவுக்கு வருகிறது.
- **ஊற்றினருகே சால் உடைந்து, துரவண்டையிலே உருளை நொறுங்கி** = கிணற்றில் ஆழத்திலிருந்து தண்ணீர் இறைக்கும் பாத்திரம் இடையிலே உடைந்து, தண்ணீர் கொட்டிப்போவதுபோல தண்ணீர்போன்ற வாழ்க்கை இனி பயனின்றி முடிந்துவிடுகிறது.
- **துரவண்டையிலே உருளை நொறுங்கி**=இருதயம் செயல்படுவதினின்று ஓய்கிறது; இரத்த ஓட்டம் நிற்கிறது, மரணம் சம்பவிக்கிறது, ஆவி சரீரத்தைவிட்டுப் பிரிகிறது. உடல் அழுக ஆரம்பிக்கிறது. இறுதியில் அது தூசியாக மாறுகிறது. இவையெல்லாம் சம்பவிக்குமுன் மனிதன் தன்னை உண்டாக்கிய சிருஷ்டிகரை நினைக்கவேண்டும் என்பதே பிரசங்கியின் அறிவுரை.

நம்மிலிருக்கும் ஜீவன் தேவன் நமக்குத் தந்த வெகுமதியாகும். இந்த ஜீவனை அவருடைய நாம மகிமைக்காய் நாம் பயன்படுத்தி, இவ்வுலகில் சந்தோஷமாயிருக்க வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

நமது வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடமும் தேவனை மகிமைப்படுத்தி வாழ்வோமாக!



# உன்னதரின் உறவு


## Dr. ராணி ஜெயச்சந்திரன்

நிர்வாகக்குழு உறுப்பினர், தமிழ் பிரதேசப் பெண்கள் ஊழியம்


ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே உங்களை வாழ்த்துகிறேன்.

வெளி.2:7 "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன், ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் என்றெழுது". இந்த வாக்குத்தத்தத்திற்கு ஒரு நிபந்தனை ஜெயித்தால் உனக்கு ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன்.
பாவத்திலிருந்து ஜெயமா? அல்லது வானமண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளோடு போராடி யுத்தம்பண்ணி, ஜெயமா? எதில் ஜெயம் கொள்ளவேண்டும்?

வெளி.2:4 "ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பைவிட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு". எபேசியர் நிருபத்தில், எபேசு சபை தேவனுடைய அன்பில் வேர் கொண்ட சபை ...அன்பின் அகலம், நீளம், ஆழம் உயரம் இன்னது என்பதை அறிந்த சபை. இப்பொழுது பின்மாற்றம். ஆதிஅன்பில் நிலைத்திருக்க வில்லை. மூன்றுகாரியங்களை நாம் இங்கு தியானிக்கப் போகிறோம்.

1. உன்னத உறவு– Divine Relationship
2. உன்னத உணவு–Divine Food
3. உன்னத பெலன் –Divine Strength

**உன்னதரின் உறவு**

சபைநடுவில் உலாவுகிறவர் 7 நட்சத்திரங்கள் வலதுகையில் ஏந்திக்கொண்டு ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியில் உலாவுகிறவர் எபேசு என்றால் Desirable, விரும்பப்படத்தக்கது என்று அர்த்தம். இப்பொழுது அன்பு மங்கிவிட்டது.

இன்னநிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனந்திரும்பு. ஆதியில் செய்தகிரியைகளை மறுபடியும் செய் என்று தேவன் ஆலோசனைச் சொல்லுகிறார். உன் கிரியைகளையெல்லாம் அறிந்திருக்கிறேன். ஆனால் ஆதியில் நீ என்னிடத்தில் வைத்த அன்பு குறைந்துவிட்டதே என்று வேதனைப்படுகிறார்.

நான் உன்னை சந்தித்த நாட்களில் நீ என்னோடு செலவழித்த நேரங்கள், என் அன்பை உணர்ந்து வடித்த கண்ணீர். நான் உமக்காகமட்டும் வாழ்வேன் என்ற பொருத்தனைகள் உமக்கே நான் அடிமை என்ற உன் அர்ப்பணங்கள், என்னை மகிமைப்படுத்தி, துதித்துப்பாடி ஆராதித்த வேளைகள், வேதத்தை வாசித்து, தியானித்து மகிழ்ந்த நேரம் எல்லாவற்றையும் நான் மறக்கவில்லை. என் பிள்ளையே நீ மறந்து போயிருக்கலாம். ஆனால் என் அன்பு ஒருநாளும் மாறாதது. அநாதிசிநேகத்தால் உன்னை சிநேகித்தேன். இருளின் அதிகாரத்தில் சிக்கிக் கிடந்த உன்னை, என் ஜீவனையே கொடுத்து மீட்டுக்கொண்டேன்.

- உன்னை மயக்கினவன் யார்? "இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்களுக்கு முன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப் பட்டிருந்தாரே (கலா. 3:1)" நினைத்துப்பார்.
- உன்னை தடைசெய்தவன் யார்? (கலா.5:7) "நீங்கள் நன்றாய் ஓடினீர்களே சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்குத் தடைசெய்தவன் யார்?" நினைத்துப்பார்.
- கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள் (கலா.5:4), நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டு பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்.

### உலக சிநேகம் உன்னை என்னை விட்டுப்பிரித்தது

இளைய மகன் பன்றிமேய்த்துக் கொண்டிருந்தான். தகப்பன் வீட்டை நினைத்தான், மன்னிப்பு கேட்பேன் என்று தீர்மானித்தான். எழுந்தான் தகப்பன் வீட்டைநோக்கி பயணம் செய்தான்-மனந்திரும்பு. Change your direction.

மனந்திரும்பி வந்த மகனைப் பார்த்து ஓடோடிச்சென்று அவனை முத்தமிட்ட தகப்பன். அதைப் போலவே இன்றும் நீ இழந்துபோன உறவை புதுப்பிக்க விரும்புகிறார். நம் தேவன் மகாபெரியவர். சர்வ வல்லவர் சர்வ சிருஷ்டிகர். அவர் சொன்னால் ஆகும் கட்டளையிட்டால் நடக்கும். அத்தனை பெரிய, மகிமையான தேவனை மண்ணிலிருந்து உருவாக்கின நம்மேல் இத்தனை அன்பா அவருக்கு!! மகனே, மகளே, மனந்திரும்பு, ஆதியில் உள்ள உறவுக்குள் கடந்துவா! உறவை விரும்பும் தகப்பன் நம் தேவன்.

### உன்னத உணவு

தேவனுடைய பரதீசின்மத்தியிலிருக்கும் ஜீவ விருட்சத்தின் கனி. உணவு வளரச்செய்யும். ஆரோக்கியமான உணவு ஆரோக்கிய வாழ்வைதரும். ஏதேன் தோட்டத்தில் தேவன் நியமித்த உணவு-ஜீவ விருட்சம். ஆதாமும் ஏவாளும் தேவன் புசிக்கக் கூடாது என்று சொன்ன மரத்தின் கனியைப் புசித்தார்கள். தேவனை விட்டுவிலக்கப்பட்டார்கள். ஜீவ விருட்சத்திற்குப் போகும் வழியைதேவன் அடைத்து, கேருபின்களையும், வீசிக் கொண்டிருக்கும் சுடரொளிப் பட்டயத்தையும் வைத்துகாவல் வைத்தார்.

எபி.10:19ல் நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு, இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாக, புதிதும் ஜீவனுள்ளதுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால் ...ஏதேனில் அடைக்கப்பட்ட வழி, 2000 வருடங்களுக்கு முன்பு இயேசுசிலுவையில் மரித்ததினால்-அந்த வழிதிறக்கப்பட்டது. அடைக்கப்பட்ட வழி திறக்கப்பட்டகாரணம்-நீ அந்த வழியாகசென்று ஜீவ விருட்சமாகிய இயேசுவை புசிக்கவேண்டும். வழியை திறந்து வைத்தவர்-உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். மண்ணுக்குள்(நமக்குள்) விண்ணகத்தின் கனிவரவேண்டும்.

யோவான் 6:57 "...நான் பிதாவினால் பிழைத்திருப்பதைப்போல என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான். நம்மாலே, நாம் மாம்சத்தின்படி பிழைத்தால் -பிசாசு நம்மை சூறையாடிவிடுவான்.

நாம் இயேசுவால் பிழைத்தால்-நாம் பிசாசை சூறையாடுவோம். ஜீவ அப்பம் நானே என்றார். பிரியமானவர்களே, நீதியின்மேல் பசியும் தாகமும் வேண்டும். நாம்

ஜீவ அப்பமாகிய வசனத்தைப் புசிப்போம். ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும். வேதாகமத்தோடு நேரம் செலவழிப்பேன், மனப்பாடம் செய்வேன், விசுவாச அறிக்கைப் பண்ணுவேன் என்ற ஆழமான தீர்மானங்கள் எடுக்க வேண்டும். புசித்தால் வளர்ச்சிவரும். திவ்யசுபாவங்கள் வரும். நம்மைபிரகாசிக்கச் செய்வார்.

## உன்னதபெலன்

லூக்கா 24:49 நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். உன்னத உணவு உன்னத பெலனை தரும். பூமியில் நாம் வசித்தாலும் நாம் இந்த உலகத்திற்கு உரியவர்கள் அல்ல... எபே.2:7 கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேக்கூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார். நமக்கு விரோதமாக போராடுகிற அந்தகாரலோகாதிபதிகளோடு எதிர்த்துநிற்க, சோர்வுகளை மேற்க்கொள்ள, விசுவாசம் பெருக, நமக்கு உன்னத பெலன் மிகவும் அவசியம்.

பிலி.4:12,13 தாழ்ந்திருக்கவும் எனக்கு தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்கு தெரியும், எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும், பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும், குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு.

உன்னத உணவு-மன்னா-ஜீவ அப்பம்-இயேசு, நம்மை பெலப்படுத்துவார் (ஏசாயா 40:29-31).

சோர்ந்துப்போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தை பெருகப்பண்ணுகிறார். கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள், அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள். காத்திருக்கும் நேரம் பெலவீன நேரமல்ல. நாம் புது பெலன் அடையும் நேரம்.

கழுகைப்போல செட்டைகளை அடித்து எழும்ப செய்யும் பெலன். எல்லா பிரச்சனைக்களுக்கும் மேலாக நம்மை எழும்பச் செய்யும் பெலன். ஓடினாலும் இளைப்படையமாட்டோம். நடந்தாலும் சோர்ந்து போகமாட்டோம்.

குழப்பமான, சோர்வான சூழ்நிலையில், வசனமாகிய மன்னாவை உபயோகப்படுத்த வேண்டும். பொல்லாப்பு எனக்கு நேரிடாது, வாதைஎன் கூடாரத்தை அணுகாது என்ற ஜீவ மன்னாவை, வாயினால் விசுவாசத்தோடு அறிக்கைப்பண்ணும்போது, புதுப்பெலன் நமக்கு உண்டாகும். எந்த உணவை உண்ணுகிறோமோ அந்த உணவின் தன்மைதான் நம் இரத்தத்தில் கலக்கும்.

மன்னாவை புசித்தால் (இயேசுவைப் புசித்தால்) அவரது பெலன், தன்மைகள் நமக்குள் கலந்துவிடும். உன்னத பெலன் நம்மை நிரப்பும். பெருங்காற்றுக்கு விரோதமாக எழும்பி நின்று அதட்டி அடக்கவைக்கும் பெலன் நமக்குள். அல்லேலூயா! பிரியமானவர்களே, ஆதி அன்புக்குள் மறுபடியும் கடந்துவருவோம். கர்த்தர் மன்னாவால் போஷித்து உன்னத பெலனைத் தருவார். எல்லாவற்றையும் நாம் ஜெயிப்போம். அல்லேலூயா!



# ஒரு தரிசன போராளியின் சகாப்தம்

## சங்கை. ரெஜினால்டு நெல்சன்

1952-2024

சங்கை. ரெஜினால்டு நெல்சன் 03.12.1952ம் ஆண்டு கேரள மாநிலத்தில் உள்ள மூணாரில் பிறந்தார்.

பள்ளி, கல்லூரி இளநிலை படிப்பை முடித்து, மூணார் தேயிலை தோட்டத்தில் Field Officer ஆக பணியாற்றி வந்தபோது முழுநேர ஊழியத்திற்கான அழைப்பைப் பெற்று, 1980-ம் ஆண்டு மதுரையிலுள்ள தமிழ்நாடு வேதாகம கல்லூரியில் இணைந்து 3 ஆண்டுகள் ஊழியப் பயிற்சி பெற்று, 1983-ம் ஆண்டு ஏ.ஜி. ஸ்தாபனத்தின் மூலம் மதுரை பழங்காநத்தம் சபைக்கு பொறுப்பாய் நியமிக்கப்பட்டார். ஒரு சில விசுவாசிகளுடன் வாடகை வீட்டில் ஆரம்பிக்கப்பட்ட சபை வளர்ந்து பெருகியது.

1985-ம் ஆண்டு சகோதரி தங்கம் நெல்சன் அவர்களை திருமணம் செய்து ஊழியத்தைத் தொடர்ந்தார். பல நூறு ஆத்துமாக்களை ஆதாயம் செய்து சபையை வளரச்செய்தார். 1995-ம் ஆண்டு சொந்தமாக இடம் வாங்கி ஆலயத்தைக் கட்டினார். சபையில் இட நெருக்கம் ஏற்பட்டபோது கடந்த 2023-ம் ஆண்டு தேவனுடைய பெரிதான கிருபையால் மீண்டும் ஆலயத்தை விரிவுபடுத்தினார்.

இந்த சபையிலிருந்து நூற்றுக்கணக்கான ஊழியர்கள், ஊழியக்காரிகள் எழும்பினார்கள். அநேக மிஷனரிகளையும் அனுப்பி வைத்துள்ளார். மிஷன் ஊழியங்களையும் தாங்கினார். ஏறக்குறைய 69 கிளை சபைகளை ஆரம்பித்தார். ஊழியம் ஆரம்பித்த எல்லா இடங்களிலும் நிலம் வாங்க, ஆலயங்கள் கட்ட உதவினார்.

18 ஆண்டுகள் ஒருங்கிணைந்த மதுரை மற்றும் மதுரை தெற்கு மண்டல தலைமை போதகராகவும், 7 ஆண்டுகள் பல மண்டலங்களுக்கு மேற்பார்வையாளராகவும் இருந்து ஊழியத்தைத் தொடர்ந்தார்.

நான் ஸ்தாபன தலைவராக இருக்கையில் மதுரையில் ஸ்தாபனத்திற்காக வாங்கப்பட்ட கேம்ப் சைட் (Camp Site) ஒருவரும் பயன்படுத்த இயலாத நிலையில் இருந்தது. அதை சீர்படுத்தும் பொறுப்பை போதகர் நெல்சனிம் ஒப்படைத்தேன். அயராது உழைத்து, பல சவால்களை சந்தித்து அந்த இடத்தை பயன்பாட்டிற்கு ஏதுவாக சீரமைத்ததில் அவரது பங்கு அளப்பரியது. மேலும் ஸ்தாபனத்தில் புதிதாக சபைகளைக் கட்ட வாங்கப்படும் இடங்களை அரசாங்கத்தில் பத்திர பதிவு செய்யும் பொறுப்பையும் உண்மையாகவும் உத்தரவாதத்துடனும் செய்தார்.

தன் ஒரே மகள் ஜாய் கெத்சியாவை பல் மருத்துவராக படிக்க வைத்தார். வெளிநாட்டில் வேலைசெய்து வந்த தம்பி பிரின்ஸ் ஆபிரகாம் (வேலூர் மண்டல தலைமைப் போதகர் சீனிவாசகம் அவர்களின் மகன்) அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தார். சில ஆண்டுகளுக்கு முன் பிரின்ஸ்ும் ஜாயும் முழுநேர ஊழிய அழைப்பைப் பெற்று பழங்காநத்தம் ஊழியத்தில் போதகர் ரெஜினால்டு நெல்சனோடு இணைந்து செயல்பட கர்த்தர் கிருபை செய்தார். இந்நிலையில் அவர் சுகவீனப்பட்ட நாட்களில் அவர்களே இந்த ஊழியத்தைத் தொடர்ந்து செய்ய தேவன் கிருபை செய்தார்.

போதகர் நெல்சன் ஒரு நல்ல அப்போஸ்தலர். நல்ல போராட்டத்தைப் போராடி, ஓட்டத்தை முடித்து ஆண்டவருடைய சித்தத்தின்படி கடந்த 05.02.2024 அன்று நித்திய ராஜ்யத்திற்குள் பிரவேசித்திருக்கிறார். அவர் விட்டுச்சென்ற குடும்பத்தையும் சபையையும் தொடர்ந்து கர்த்தர் ஆசீர்வதிக்க நாம் யாவரும் ஜெபிப்போம்.

- Rev. P.S.ராஜமணி

தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கிய ஊழியங்கள்

# தகப்பனின் பொறுப்புகள்



**Rev. ஜான் பீட்டர்**

Registrar, ABSC, Pondicherry

புருஷர்களுக்குப் பல்வேறு நிலைகளில் பல்வேறுப் பொறுப்புகள் இருக்கின்றது என்றாலும் ஒரு தகப்பனாக மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது. இன்றைய நவீன உலகில் பல்வேறு அலுவல்களின் மத்தியிலும் ஒரு தகப்பனாக நமக்கு இருக்கும் பொறுப்பை ஒரு நாளும் நாம் மறந்து விடக்கூடாது. நம்முடைய பிள்ளைகள் தேவன் விரும்பும் பிள்ளைகளாகவும், அவரையே சேவிப்பவர்களாகவும் வளர்வதற்கு தகப்பன்மார்களாக நம்முடைய பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். பழைய ஏற்பாட்டிலிருந்து பல்வேறு உதாரணங்களோடு நம்முடையப் பொறுப்புகள் ஒவ்வொன்றாக காணப்போகின்றோம்.

### பராமரிப்பு

ஒரு நல்ல தகப்பனாக நம்முடைய பிள்ளைகளை பராமரிக்கும் பொறுப்பு நமக்கிருக்கின்றது. இஸ்ரவேலர்களைக் கர்த்தர் வனாந்திரத்தில் நடத்தி வந்த விதத்தை மோசே நினைவுப்படுத்தும்போது ஒரு மனிதன் தன் பிள்ளையை சுமப்பதுபோல இஸ்ரவேலர்களை சுமந்து வந்ததாக சித்தரிக்கிறார். ஒரு தகப்பனுடைய உருவகத்தை அங்கே உபயோகிப்பதைப் பார்க்கிறோம் (உபா.1:31). கர்த்தர் தம்மை பல்வேறு இடங்களில் ஒரு தகப்பனைப் போல சித்தரிக்கிறார். ஏசாயா 1:2 ஆம் வசனத்தில் நான் பிள்ளைகளை வளர்த்து ஆதரித்தேன் என்கிறார். இங்கே ஒரு தகப்பனைப்போல தேவன் தம்முடையப் பிள்ளைகளைப் பாதுகாத்தார். என்பதன் மூலம் நாம் தகப்பனுடைய ஒரு முக்கியப் பொறுப்பை அறிந்து கொள்ளமுடிகிறது. பிள்ளைகளுக்கு தகப்பனுடைய பராமரிப்பு மிகவும் அவசியமாக இருக்கிறது. சில பொறுப்புகள் பெண்களுடையது என்றும் சில பொறுப்புகள் ஆண்களுக்குறியது என்றும் பிரித்துப் பார்க்கும் சமுதாயத்திலிருந்து நாம் சற்று மாறியிருந்தாலும், இன்னும் மாற்றத்தை நோக்கி பயணம் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கின்றது. குழந்தைகளை பராமரிக்கும் பொறுப்பு ஒரு தாய்க்கு மாத்திரமல்ல, தகப்பனுக்கும் உண்டு என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய பிள்ளைகளை போஷிப்பதிலும், பராமரிப்பதிலும், அவர்களோடு நேரம் செலவிடுவதிலும் நாம் கவனம் செலுத்துவோமாக.

### நல்ல மாதிரி

நம்முடைய பிள்ளைகளுக்கு ஒரு தகப்பனாக நல்ல மாதிரியாக இருக்க வேண்டும். பிள்ளைகள் பெற்றோர்களுடைய செயல்களைக் கவனிக்கின்றனர். அவர்களுடைய செயல்களை அவர்கள் பல நேரங்களில் பின்பற்ற துவங்குகின்றனர். வீட்டிற்கு வெளியில் நம்முடைய பிள்ளைகளின் சில செயல்பாடுகள் பல நேரங்களில் அவர்கள் சிறு வயதில் தங்கள் குடும்பத்தில் உள்ளவர்களைப் கவனித்துக் கற்றுக்கொண்டவைகளாக இருக்கின்றது. ஒரு நல்ல தகப்பனுக்கு மாதிரி நம்முடைய கர்த்தரைப் போல யாரும் இருக்க முடியாது. அவர் நம்முடைய பிதவாக இருக்கிறார் (ஏசாயா 63:16). அவர் நீதியுள்ளவர். அவர் பரிசுத்தமுள்ளவர். அவர் வாக்கில் உண்மையுள்ளவர். அந்த பரமதகப்பனை பின்பற்றுகிற நாம் அவரை நாம் நம்முடைய குடும்பத்தில் வெளிப்படுத்துவது அவசியமாக இருக்கிறது. கிறிஸ்துவைக் குறித்து அதிகமாய் போதிப்பதைக் காட்டிலும், கிறிஸ்துவைப் போல வாழ்வது நம்முடையப் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல மாதிரியாக அமையும். சில காரியங்களைச் சொல்லி மாற்றுவதைக் காட்டிலும் வாழ்ந்து காண்பிக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது. கிறிஸ்துவின் மூலம் தேவன் நம்மீது ஆதினத்தில் வைத்த அந்த அன்பை வெளிப்படுத்திக் காண்பித்தார். ஜெபிப்பது, வேதம் வாசிப்பது, உண்மையாக இருப்பது, நேரத்தை நிர்வகிப்பது, சொல் தவறாமல், நம்முடைய

ஆரோக்கியத்தைக் காப்பது போன்ற செயல்களைக் கவனிக்கும் நம்முடைய பிள்ளைகள் நிச்சயமாக நம்மை பின்பற்றுவார்கள்.

### போதனை

கர்த்தர் நமக்குக் கற்றுக்கொடுக்கும் காரியங்களை, நாம் அறிந்த சத்தியத்தை நம்முடைய பிள்ளைகளுக்கு போதிக்க வேண்டும். ஒரு நாளும் அவர்களுடைய இருதயத்தைவிட்டு நீங்காமல் அவைகளைக் குறித்துப் பேச வேண்டும் (உபாகமம் 4:9-10; 6:6-7; 11:19). நம்முடைய சோகங்களையும் நாம் சந்திக்கும் பிரச்சனைகளைக் குறித்தும் நம்முடைய பிள்ளைகளிடம் அதிகமாகப் பேசமால் கர்த்தருடைய வார்த்தையைப் பேச நேரம் ஒதுக்குவோமாக. ஆபிரகாம் கர்த்தர் சொன்னதை நிறைவேற்றும்படியாய் தன் பிள்ளைகளுக்கும், தனக்கு பின்வரும் தன் வீட்டாருக்கும் நீதியையும் நியாயத்தையும் செய்யுங்கள், கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்று அறிந்திருக்கிறேன் என்று கர்த்தரே ஆபிராகமைக் குறித்து சொன்னதை நாம் வாசிக்கின்றோம் (ஆதி.18:19). கர்த்தர் ஆபிரகாமைக் குறித்து சொன்ன இந்த சாட்சி புருஷர்களாகிய நம்மெல்லாருக்கும் ஒரு பாடமாக அமைந்திருக்கிறது. தேவன் ஆபிரகாமைக் குறித்து சொன்ன இந்த வார்த்தைகள் இனி நிகழப்போவதாக இருந்தாலும் அவன் மீது வைத்த அந்த உறுதியான நம்பிக்கையைக் காண்பிக்கின்றது. நம்முடைய குடும்பத்தாருக்கு குறிப்பாக நம்முடைய பிள்ளைகளுக்கு கர்த்தருடைய வழியைக் காத்து நடக்க போதிக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது. நம்முடைய பெயரை கர்த்தர் சொல்லி அவன் அவனுடைய பிள்ளைகளுக்கு என் வழியைக் குறித்து போதிப்பான் என்று கர்த்தர் நம்மைக் குறித்து சொல்ல முடியுமா?

### ஆராதனை

நாம் கர்த்தரை ஆராதிப்பது மட்டுமல்ல, நம்முடைய பிள்ளைகளை ஆராதிக்க நடத்த வேண்டும். நம்முடைய குடும்ப ஜெபம், குடும்பத்தோடுகூட ஆராதனைக்குச் செல்வது, சில முக்கிய ஜெபங்களில் நம்முடைய பிள்ளைகளோடு பங்கெடுப்பது அவசியம். எல்க்கான வருஷந்தோறும் கர்த்தரைப் பணிந்துகொள்ளவும் அவருக்கு பலியிடவும் தன் ஊராகிய எப்பிராயீமிலிருந்து (1சாமுவேல் 1:1) சீலோவுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தான் (1 சாமுவேல் 1:4). அன்னாள் சாமுவேலைப் பெற்ற பின்பும் கர்த்தருக்கு வருஷாந்தரம் செலுத்தும் பலியையும் தன் பொருத்தனையையும் செலுத்தும்படியாக, தன் வீட்டாரனைவரோடுங்கூடப் போனான் (1 சாமுவேல் 1:21). தான் மட்டுமல்லாமல் முழுக் குடும்பத்தையும் கர்த்தரை ஆராதிக்க வழிநடத்தியதை 1 சாமுவேலில் சித்தரித்திருப்பதின் மூலம் அறிய முடிகின்றது. நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியில் மாத்திரமல்ல நம்முடைய முழுக்குடும்பத்தினுடைய ஆவிக்குறிய வளர்ச்சியில் புருஷர்களாகிய நாம் அக்கறை கொள்ள வேண்டும். சிறு பிள்ளைகளாக இருந்தாலும் நம்முடைய பிள்ளைகள் கர்த்தரை ஆராதிக்க உற்சாகப்படுத்தவும், அதற்குறிய வாய்ப்புகளை உருவாக்கித்தர தவறாமலும் இருக்க வேண்டும். யோசுவா நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் (யோசுவா 24:15) என்று உரைத்தது போல நம்முடைய பிள்ளைகளை வீட்டிலே விட்டு நாம் மட்டும் ஆலயத்திற்கு சென்றுவிடாதபடி அவர்களையும் எப்பொழுதும் அழைத்துச் செல்ல வேண்டும். கர்த்தரை ஆராதிப்பதற்கு வாழ்க்கையின் எல்லா சூழ்நிலையிலும் முக்கியத்துவப்படுத்த வேண்டும்.

### கண்டிப்பு

ஆபிரகாமைப் போல நாம் நம்முடையப் பிள்ளைகளுக்கு கர்த்தருடைய நியாயத்தையும், நீதியையும் குறித்துப் போதிப்பது மட்டுமல்லாமல், அவர்கள் செய்யும் தவறுகளை நாம் கானும்போது நாம் கண்டிக்க வேண்டியது அவசியம். ஏலி ஒரு தகப்பனாகத் தன்னுடைய குமாரர்கள் செய்த பாவத்தை அறிந்திருந்தும் அவர்களை அடக்காமற் போனதினால் கர்த்தர் அந்த குடும்பத்திற்கு நியாயத்தீர்ப்பை வரவழைத்தார் என்று பார்க்கிறோம் (1சாமுவேல் 3:13). நம்முடைய பிள்ளைகள் தவறு செய்யும்போது கண்டிக்காமல் இருக்கக் கூடாது. நாம் கண்டியாமல் இருந்துவிட்டோம் என்றால், பிள்ளைகள் தாங்கள் செய்யும்

தவறுகளை உணராமலும், அவைகளைத் திருத்திக்கொள்ள முயற்சி செய்யாமலும் போக வாய்ப்புண்டு. முதிர் வயதிலும் அவர்கள் கர்த்தருடைய வழியில் நடப்பதற்கு நாம் அவர்களை நடத்த வேண்டிய வழியில் நடத்த வேண்டும் (நீதி.22:6). உன் மகனை சிட்சை செய் என்று நீதிமொழிகள் 29:17ல் வாசிக்கின்றோம். தகப்பன் சிட்சியாத புத்திரன் உண்டோ என்று வாசிக்கின்றோம் (எபிரெயர் 12:7). தான் நேசிக்கிற எந்த மகனையும் தகப்பன் சிட்சிக்கிறார் என்று பார்க்கிறோம். இதில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய காரியம், நாம் நம்முடைய பிள்ளைகளைக் கண்டிக்கும்போது அன்போடு கண்டிக்க வேண்டும். நாம் அவர்களைக் கண்டிக்கும்போது நாம் அவர்கள்மீது வைக்கும் அந்த அன்பு வெளிப்பட வேண்டும்.

## தீர்மானம்

ஒரு நல்லத் தகப்பனாக நம்முடையப் பிள்ளைகளைக் குறித்து நாம் எடுக்கும் தீர்மானங்கள் தேவனுக்கு உகந்தவையாக இருக்க வேண்டும். நம்முடைய பிள்ளைகளின் படிப்பு, அவர்களின் வேலை மற்றும் திருமணம் போன்ற காரியங்களில் தேவனுக்கு சித்தமானதை செய்ய வேண்டும். உலகத்தின் பார்வைக்கு நலம் என்றும், நம்முடையப் பிள்ளைகளுக்கு நன்மையென்றும் உலக பிரகாரமாக யோசித்து நாம் எடுக்கும் தீர்மானங்கள் கர்த்தருக்கு உகந்தவையாக இல்லாமல் போய்விடக்கூடும். சில சமயத்தில் கர்த்தருக்கு பிரியமான தீர்மானத்தை தாய்மார்கள் எடுக்கும்போது அது கர்த்தருக்கு பிரியம் என்று நாம் அறிந்தால் அதை நாம் செய்வதற்கு தயங்கக்கூடாது. அன்னாள் தனக்குப் பிறந்த சாமுவேல் கர்த்தருடைய சந்நிதியில் காணப்படவும், அங்கே எப்பொழுதும் இருக்கவும் தேவலாயத்தில் கொண்டுபோய் விடுவேன் என்று தீர்மானம் எடுத்து தன் கணவனிடத்தில் சொன்னபோது, நீ உன் இஷ்டபடி செய் கர்த்தர் தம்முடைய வார்த்தையை மாத்திரம் நிறைவேற்றுவாராக என்று முழுமனதுடன் சாமுவேலைக் கர்த்தருக்காக இருவரும் சேர்ந்து அர்பணம் செய்ததைப் பார்க்கிறோம் (1 சாமுவேல் 1:22-23). எல்லா சூழ்நிலைகளிலும் நாம் இனக்கத்தோடு தீர்மானங்களை எடுப்பது கடினமாயினும், இனங்கி தீர்மானங்களை எடுக்க கர்த்தரிடத்தில் ஒத்தாசை கேட்கவும், நம்முடையக் குடும்பத்தாரிடம் அதைக்குறித்து பேசவும் வேண்டும்.

## ஜெபம்

இந்த பொறுப்பு கடைசியாக சொல்லப்பட்டாலும், இது முதன்மையானதாக இருக்கின்றது. நம்முடைய பிள்ளைகளுக்காக நாம் ஜெபிக்க வேண்டியது அவசியம். அவர்கள் வளர்ந்தபின்பு தவறான காரியங்களை செய்வதைப்பார்த்து மனம் வருந்தி அவர்களுக்காக ஜெபிக்கத் துவங்குவதைப் பார்க்கிலும், இளம்பிராயத்தில் அவர்கள் இருக்கும்போதே அவர்களுடைய எதிர்காலத்தை மனதில் வைத்து அனுதினமும் அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். யோபு தன் குமாரர்கள் ஒருவேளை பாவம் செய்திருப்பார்களோ என்று எண்ணி அவர்களைப் பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து அவர்கள் எல்லாருக்காகவும் சர்வாங்க தகனபலிகளை செலுத்துவான் (யோபு 1:5). நம்முடைய பிள்ளைகள் எதிர்காலத்தில் எல்லா செல்வ செழிப்புகளுடன் நலமுடன் வாழவேண்டும் என்று எண்ணுவதைப் பார்க்கிலும், நம்முடையப் பிள்ளைகள் பாவம் செய்யாமல் பரிசுத்தத்தோடு வாழவேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்தி அவர்களுக்காக ஜெபம் பண்ணவேண்டும்.

நம்முடைய பிள்ளைகள் கர்த்தருக்குள் நன்றாக வளர்வதற்கு நாம் மேற்கூறிய பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். ஒரு நல்ல தகப்பனாக நம்முடைய மனதில் நாம் வைக்க வேண்டிய ஒரு முக்கியக் காரியம், தேவன் தந்த நம்முடைய பிள்ளைகள் கர்த்தர் நமக்குத் தந்தவர்கள். அவர்கள் கர்த்தருக்கே உரியவர்கள், அவர்களுக்கு பரம தகப்பன் அவரே என்பது. நாம் அவர்கள் இந்த பூமியில் பிறப்பதற்கும் ஒரு கருவியாக மாத்திரமே இருக்கின்றோம். நம்முடைய பிள்ளைகளுக்கு நாம் உக்கிராணக்காரர்கள் மாத்திரமே. கர்த்தர் நம்முடைய கரத்தில் அவர்களைத் தந்திருக்கிறபடியால் கர்த்தருக்கேற்ற விதத்தில் அவர்களை நடத்த வேண்டிய பொறுப்பு நமக்கிருக்கின்றது. அந்த பொறுப்புகளை நாம் சரியாக செய்ய கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் பெலப்படுத்துவாராக.

கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்



## REGULAR FULL TIME COURSES

### முழு நேர பயிற்சி வகுப்புகள்

முழு நேர ஊழியத்திற்கு அர்ப்பணித்திருக்கும்
சகோதரர்களுக்கு

போதனை மொழி: தமிழ்

- **இறையியல் பட்டப்படிப்பு**
  (Bachelor of Theology) (ATA)
  தகுதி: 12ம் வகுப்பு காலம்: 3 ஆண்டுகள்
- **இறையியல் டிப்ளோமா**
  (Diploma in Theology) (ATA)
  தகுதி: 10ம் வகுப்பு காலம்: 2 ஆண்டுகள்
- **இறையியல் சான்றிதழ்**
  (Certificate in Theology)
  தகுதி: 10ம் வகுப்புக்கு கீழ் காலம்: 2ஆண்டுகள்

# முறையான வேதாகம கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு

## ADMISSION OPEN

## EVENING PART TIME COURSES

### பகுதி நேர பயிற்சி வகுப்புகள்

For Both Men and Women

Classes: Monday, Thursday & Friday | 6:30 – 8:30 Pm

போதனை மொழி: தமிழ் மற்றும் ஆங்கிலம்

- **MASTER OF ARTS IN CHRISTIAN MINISTRY (ATA)**
  Eligibility: Any Degree | Duration: Two Years
  Medium of Instruction: English
- **கிறிஸ்தவ ஊழியம் – முதுகலை (ATA)**
  தகுதி: பட்டபடிப்பு காலம்: 2 ஆண்டுகள்

## EVENING PART-TIME ONLINE COURSE

### மாலை பகுதி நேர ஆன்லைன் வகுப்பு

- **கிறிஸ்தவ ஊழியம் – டிப்ளோமா**
  தகுதி: 10ம் வகுப்பு காலம்: 2 ஆண்டுகள்

For further information and application form, please contact
Rev. M. Sampath (Principal, MABC)
Mobile : +91 - 94442 87322

# MADRAS ASSEMBLIES OF GOD BIBLE COLLEGE

No. 191 (New No. 6), Anna Salai,
Little Mount, Chennai – 600 015, TN.
Phone: 044 – 2235 1646 | 2235 3100
Email: mabc_edu@yahoo.com



# மிஷனெரி ஊழியம் பெருகட்டும்


## பாஸ்டர். ஜெகில் எபிதாஸ்

துணை இயக்குநர் - தமிழ்பிரதேச வடகிழக்கு மிஷன்


கிறிஸ்துவுக்குள் பிரியமான அசெம்பிளிஸ் ஆஃப் காட் மேய்ப்பர்களுக்கும், விசுவாசிக்களுக்கும் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். சர்வ வல்லமையுள்ள தேவன் நம்முடைய தமிழ் பிரதேச மிஷன் ஊழியங்களை ஆசீர்வதித்து வருகிறார். நம்முடைய பிரதேசத்தில் நம்மை நடத்தி செல்லும் ஸ்தாபன தலைமைத்துவத்திற்காய் நாம் நன்றி செலுத்தி ஜெபிக்க வேண்டும். நம்முடைய பிரதேசத்தில் 13 கண்காணிப்பாளர்கள், 78 மண்டல தலைமை போதகர்கள், இரண்டு லட்சம் விசுவாசிகளின் அயராத ஜெபத்தினாலும் உற்சாகமான காணிக்கையினாலும் மாதந்தோறும் 560 மிஷனெரிகளை தாங்க மாதந்தோறும் நாற்பது லட்சம் பணத் தேவைகள் சந்திக்கபட நம்மை அற்புதமாய் நடத்தி செல்லும் சர்வ வல்ல கர்த்தரை நாம் ஸ்தோத்தரிப்போமாக. இந்த 2024ஆம் ஆண்டு மிஷனெரி ஊழியங்கள் பெருக்கத்தின் ஆண்டு

## I. எல்லைகள் விரிவாகட்டும்

1. இந்த வருடம் ஏசாயா 54:1-3 படி பிள்ளை பெறாத மலடியே, மகிழ்ந்து பாடு; கர்ப்ப வேதனைப்படாதவளே கெம்பீரமாய் பாடி ஆனந்த சத்தமிடு வாழ்க்கைபட்டவளுடைய பிள்ளைகளைப் பார்க்கிலும், அநாத ஸ்திரீயினுடைய பிள்ளைகள் அதிகம் என்று கர்த்தர் சொல்லுகிறார்.
2. உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு; உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும்; தடைசெய்யாதே; உன் கயிறுகளை நீளமாக்கி உன் முளைகளை உறுதிப்படுத்து
3. நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்; உன் சந்ததியார் ஜாதிகளைச் சுதந்தரித்துக் கொண்டு பாழாய்க் கிடந்த பட்டணங்களைக் குடியேற்று விப்பார்கள்.

## A. தரிசன எல்லைகள் விரிவாகட்டும்

சிறையிருப்பில் இருக்கும் மக்களை விடுதலையாக்கும் தரிசனங்களை கர்த்தர் தருவாராக. தேவனுடைய சாயலாய் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் தேவனுக்கு கீழ்படியாமல், அவருடைய சத்தத்திற்கு செவிகொடாமல் பாவத்தில் சிறைப்பட்டு போனார்கள். அறியாமையின் இருளில் சிறையிருப்பில் இருப்பது தேவனின் சித்தம் அல்ல. தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட நாம் தேவ சித்தத்தை செய்வதும், சிறைப்பட்டு போன சீயோனே உன் சிறையிருப்பை திருப்பும் நாள் வந்தது.

1. **பிள்ளை பெறாத மலடியே** ஏசாயா 54:1. சபை மலடியாய் இருப்பது தேவ சித்தம் அல்ல. நாம் மகிழ்ந்து பாட வேண்டும். சங்கீதம் 137:1-6 பாபிலோன் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து அங்கே சீயோனை நினைத்து அழுதோம்; 2.அதின் நடுவிலிருக்கும் அலரிச்செடிகளின்மேல் எங்கள் கின்னரங்களைத் தூக்கிவைத்தோம்; 3.எங்களைச் சிறைபிடித்தவர்கள் அங்கே எங்கள்

பாடல்களையும், எங்களைப் பாழாக்கினவர்கள் மங்கள கீதத்தையும் விரும்பி; சீயோனின் பாட்டுகளில் சிலதை எங்களுக்குப் பாடுங்கள் என்று சொன்னார்கள்; 4. கர்த்தரின் பாட்டை அந்நியதேசத்தில் நாங்கள் பாடுவதெப்படி?; 5. எருசலேமே, நான் உன்னை மறந்தால் என் வலதுகை தன் தொழிலை மறப்பதாக; 6. நான் உன்னை நினையாமலும், எருசலேமை என் முக்கியமான மகிழ்ச்சியிலும் அதிகமாக எண்ணாமலும்போனால், என் நாவு என் மேல்வாயோடு ஒட்டிக்கொள்வதாக.

சீயோனில் தேவ சமுகத்தில் இருக்கவேண்டிய நம்முடைய இந்திய தேச மக்கள் சிறையிருப்பில் இருக்கிறார்கள்.

1. அகலியாவின் குமாரனாகிய நெகேமியாவின் நடபடிகள்: இருபதாம் வருஷம் கிஸ்லேயு மாதத்தில் நான் சூசான் என்னும் அரமனையில் இருக்கும்போது சம்பவித்தது என்னவென்றால்,
2. என் சகோதரரில் ஒருவனாகிய ஆனானியும், வேறே சில மனுஷரும் யூதாவிலிருந்து வந்தார்கள்; அவர்களிடத்தில் நான் சிறையிருப்பில் மீந்து தப்பின யூதரின் செய்தியையும், எருசலேமின் செய்தியையும் விசாரித்தேன்.
3. அதற்கு அவர்கள்: சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் அந்த தேசத்திலே மகா தீங்கையும் நிந்தையையும் அநுபவிக்கிறார்கள்; எருசலேமின் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய் கிடக்கிறது என்றார்கள்.
4. இந்த வார்த்தைகளைக் கேட்டபோது, நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி:

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான தேவ சங்க சபை ஊழியர்களே, விசுவாசிகளே இந்திய தேசத்தின் தகவல்களை உங்கள் தரிசன பாரமாய் மாற்றுங்கள். சுவிசேஷம் அறிவிக்கப்படாத கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க ஆட்கள் இல்லையென்று சொன்னபோது நம்முடைய மிஷனெரிகள் ஊழிய அழைப்பிற்கு கீழ்படிந்து வட இந்தியாவிலும், தென் இந்தியாவில் கிராமங்களில் ஊழியம் செய்ய தங்களை அர்பணித்தார்கள், ஊழியம் செய்யும் ஊழியர் குடும்பங்களை விசாரிக்கும் ஆனானியும், ஜெபிக்கும் நெகேமியாக்களும், அலங்கத்தை எடுத்துக்கட்டும் விசுவாசிகளையும் தேவனுடைய கண்கள் தேடிக்கொண்டிருக்கிறது. பீகார் மாநிலத்தில் இன்னும் 10 மாவட்டங்களில் ஒரு ஜெப குழு கூட அமைக்கப்படவில்லை. ஜனங்கள், ஊழியர்கள், மேய்ப்பர்கள், சுவிசேஷகர்கள் இல்லாமல் சாத்தானின் கையில் சிக்குண்டு சிறையிருப்பில் இருக்கிறார்கள். இவர்களை விடுவிப்பது யாருடைய பொறுப்பு. யாரோ செய்யட்டும் எனக்கென்ன நான் நலமாய் வாழ்ந்தால் அதுபோதும் என்ற ஆடம்பர, மந்தமான ஆவிக்குரிய நிலை மாற நாம் கதறி ஜெபிப்போம். நம்முடைய மிஷனெரிகளுக்காய் ஜெபியுங்கள். நம்முடைய ஸ்தல சபைகளில் மிஷனெரிகளுக்காய் ஜெபிக்கும் ஜெபநேரத்தை எப்பொழுதும் எல்லா கூடுகையிலும் ஏற்படுத்துங்கள். நாம் நல்ல ஆகாரம் சாப்பிடும்போது நம்முடைய மிஷனெரி குடும்பங்களை நினைத்து ஜெபியுங்கள். நாம் நல்ல உடைகளை உடுத்தும்போது உங்கள் குடும்பத்தில் ஒருவராக ஒரு மிஷனெரி குடும்பத்தை உங்கள் பொருளாதாரத்தால் தாங்குங்கள். மே மாதம் விடுமுறை நாட்களில் ஒரு மிஷனெரி குடும்பத்தை வரவழைத்து உங்கள் சபையில் தங்கவைத்து அவர்களோடு பேசி நாங்கள் உங்களுக்காக இருக்கிறோம் என்கிற தைரியத்தை கொடுங்கள். ஒரு விசுவாசி 500 ரூபாய் மாதம் கொடுத்தால் 10 விசுவாச குடும்பங்களாய் இணைந்து ஒரு மிஷனெரி குடும்பத்தை தாங்கலாம். வருடத்தில் ஒரு முறையாவது நாம் குடும்பமாக 10 நாட்கள் மிஷனெரி

குடும்பங்களோடு தங்கி ஊழியம் செய்ய, அவர்களை உற்சாகப்படுத்த நம்மை அர்ப்பணிப்போம். ஒரு கிராமத்தில் ஒரு ஜெபக்குழுவை ஏற்படுத்த 7 இலட்சம் கிராமங்களிலும் தேவ சமுகத்தை கொண்டு வர பிரயாசப்படுவோம். நம்முடைய சபைகளில் மாதந்தோறும் ஒரு ஞாயிறு ஆராதனையில் மிஷனெரி குடும்பத்தை வரவழைத்து பயன்படுத்துங்கள். மிஷனெரிகளின் தியாகம், அவர்களின் சாட்சி நம்முடைய சபைகளில் அநேக வாலிபர்களை ஊழியத்தில் எழும்ப தேவன் கிருபை செய்வார்.

**II. தடை செய்யாதே,** ஏசாயா 54:2

நம்முடைய விசுவாசம், நம்முடைய தேவைகள், நம்முடைய கவலைகள், சுயங்கள், ஆடம்பரமான வாழ்வு, நம்முடைய நண்பர்கள், தேவன் செய்ய நினைப்பதை தடை செய்துவிடக்கூடாது. நானே ஒரு சின்ன சபையை வைத்திருக்கிறேன், எனக்கே அதிக தேவைகள் இருக்கின்றது. இந்த எண்ணங்கள் நம்மை தடுத்துவிடக்கூடாது, கடந்த நாட்களில் இந்திய தேசத்தில் கட்டப்பட்ட ஒரு விக்கிர கோவில் வல்லமை கொண்டு வர 2585 மாவட்டங்களில் மண் எடுக்கப்பட்டு 265 நதிகளில் தண்ணீர் எடுத்து யாகங்கள் செய்து இந்தியாவை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர எதிர்வல்லமைகள் செயல்படும்போது ஜெபிக்கும் ஜெபவீரர்களுடைய பாதங்கள் எல்லா கிராமங்களிலும் பதியட்டும். ஜெபசேனை, துதிசேனை எழும்பட்டும. நாம் இணைந்து சபையாய் செயல்படுவோம். நம்முடைய ஆசீர்வாத எல்லைகளை, விசுவாச எல்லைகளை, இந்த ஆண்டு சர்வ வல்லமையுள்ள தேவன் பெருகசெய்வார்.

---

## ஆண்டவரே ஏன் இப்படி?
## Why Lord?



**"என்னை ஏன் பலவீனப்படுத்தி விட்டீர்?"**
"நீ என் பலத்தைச் சார்ந்து வாழப்பழகிக் கொள்வதற்காக..."

**"எனக்கு ஆதரவானவர்களை ஏன் அப்புறப்படுத்தினீர்?"**
"நிலையற்ற மனிதர்களை சார்ந்து வாழ்வது சரியல்ல என்பதால்"..

**"குழப்பமான சூழ்நிலைகளை ஏன் எனக்கு அனுமதித்தீர்?"**
"தெளிவான முடிவுகளை எடுக்கும் பயிற்சியை நீ பெறுவதற்காக"..

**"நான் கேட்டதையெல்லாம் நீர் ஏன் தரவில்லை?"**
"உனக்கு எது தேவையோ அதை மட்டுமே நான் தர விரும்புவதா

**"அநீதியாளர்களை ஏன் எனக்கு எதிராக ஜெயிக்கவிட்டீர்?"**
"நீதியினிமித்தம் துன்பப்படுவது அவசியம் என்பதால்"...

**"விசுவாசித்துக் கேட்டவைகளை நீர் அருள வில்லையே-ஏன்?"**
"சரியானவைகளை நீ விசுவாசித்துப் பழகுவதற்காக"...

**"மற்றவர்களை மாற்றாமல் என்னையே நீர் மாறச் சொல்கிறீரே?**
"என்னை நேசிக்கிறவர்களைத்தான் நான் மாற்ற விரும்புகிறேன்"...

**"அவசியமான சில நன்மைகளை நீர் எனக்குத் தரவில்லையே?**
"மிகத் தேவையானது இல்லாமலும் நீ வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்பதால்"....

**"ஏன் எனது நல்லத் திட்டங்களை நீர் தோல்வியடையச் செய்தீரே?**
"அதைவிட நல்ல திட்டங்களை உனக்காக நான் வைத்திருப்பதால்"...

**"வேறு சிலருக்கு நீர் அளித்த உயர்வை எனக்கு நீர் தரவில்லையே?**
"அவர்களின் அழைப்பு வேறு, உன் அழைப்பு வேறு என்பதால்"...



# புத்தாண்டு துவக்க கால சிந்தனை

**Rev. J. தேவதாசன் கலையரசன்**
உதவி இயக்குநர், வடமேற்கு மிஷன்

ஆவலுடன் எதிர்பார்த்திருந்த புத்தாண்டு ஆராதனையும் ஒரு வழியாக நல்லபடியாக நடந்து முடிந்துவிட்டது. போன வருடத்தைக் காட்டிலும், இந்த வருட புத்தாண்டு ஆராதனைக்கு அநேக மக்கள் கூடுதலாக வந்த மகிழ்ச்சி, போதகருக்கு. “கஷ்டம் எல்லாம் முடிந்து ஒரு புதிய துவக்கம் கொடுக்கப்படுவதாக கர்த்தர் இந்த வருடம் எனக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார்” என்ற மகிழ்ச்சி விசுவாசிகளுக்கு

ம்... இப்படி எத்தனையோ புத்தாண்டு வருவதும் போவதுமாயிருந்தாலும் அதில் ஏற்பட்ட மகிழ்ச்சி. ஒரு சில வாரங்களுக்குள் குன்றிப் போவது ஏன்? 1-ம்தேதி ஆராதனைக்கு பிந்தைய அடுத்த ஞாயிறு அன்றே அதே கூட்டம் வரவில்லையே என்று சோர்வு போதகருக்கு ஏற்படுகிறது. மீண்டும் அதே பழைய சிலுவை தானா என்ற சலிப்பு விசுவாசிகளுக்கு வந்துவிடுகிறது. அப்படியானால் புத்தாண்டு வாக்குத்தத்தங்களும், உயிர்பித்தலும், அனலும் சில நாட்களுக்குத் தானா?

புத்தாண்டில் பெற்ற விசுவாச எழுச்சி **நிலைத்திருக்க** ஏதாகிலும் வழியுண்டா? இது குறித்து போதகர்களும் விசுவாசிகளும் அறிந்து கொள்ள வேண்டிய சில முக்கிய தகவல்களை இக்கட்டுரை விவரிக்கிறது.

## I. ஏன் குறுகிய காலத்திற்குள் மறைகிறது?

வருடாந்திர வாக்குத்தத்தம் தேவை தானா? அன்று மட்டும் தான் கர்த்தர் வாக்குத்தத்தம் கொடுப்பாரா? என்ற விவாதங்கள் இந்நாளில் பெருமளவில் எழுப்பப்படுகிறது. நாம் அந்த விவாதங்களுக்குள் நுழைய இது பொருத்தமான இடம் இல்லை. ஆனால் புத்தாண்டு வாக்குத்தத்தம் பெரிதாக போற்றப்படும் சபைகளில் உள்ள நிலையை இங்கு நாம் பேசுகிறோம்.

**1:1** **நினைவுபடுத்தப்படாத** எந்த ஒரு வாக்குத்தத்தமும், நம் வாழ்வில் முக்கிய இடத்தைப் பெறுவதில்லை.

- ஆபிரகாமிற்கு கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தம், பல நிலைகளில் அவனுக்கு திரும்ப நினைப்பூட்டப்பட்டது.
- கடந்த வருடம் நாம் பேசின வாக்குத்தத்தம், விசுவாசத்தில் உரிமை பாராட்டி மக்கள் எடுத்துக் கொண்ட வாக்குத்தத்தம்.. எப்போது? எந்த மாதம்? மீண்டும் சபையில் பேசப்பட்டது? நினைப்பூட்டப்பட்டது? (ஆதி.12:1-3; 13:14-17; 15:1,4,5,7; 15: 13-21; 17:2).
- 2023-ன் வாக்குத்தத்தம், 2023-ல் நவம்பர் மாதம் வரை ஞாபகமிருக்கிறதா? என்று சபையில் கேட்டுச் சோதித்துப் பாருங்கள். அநேகருக்கு ஞாபகமிருப்ப தில்லை. ஏனென்றால்...

**1:2** வாக்குத்தத்தத்தை நினைவுபடுத்தும் செய்தி மீண்டும் கொடுக்கப்படவில்லை, மட்டுமல்ல அதைத் தொடர்ந்து வரும் ஞாயிறு ஆராதனைகளில், மாதாந்திர ஆராதனைகளில், வருடாந்திர வாக்குத்தத்தத்திற்கு தொடர்பே இல்லாத புதிய துணை நிலை வாக்குத்தத்தங்கள் ஏராளமாக கொடுக்கப்படுவதால் தான் வருடாந்திர வாக்குத்தத்தம் மனதில் நிற்பதில்லை.

## II. நிகழ்ச்சிகளின் அவசியமும், பிரச்சனைகளும்

**2:1** ஒரு சபை உயிர்ப்புடன் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அச்சபையில் நடத்தப்படும். ஏராளமான நிகழ்ச்சிகளும் ஒரு காரணம் தான்.

**2:2** ஆனால் ஒரு சபை நிகழ்வுகளை மட்டும் **மையப்படுத்தி** உயிர் வாழ்கிறதென்றால் அது ஆரோக்கியமான சபை அல்ல.

**2:3** சில சபைகளில், ஏராளமான நிகழ்ச்சிகள், நடத்தப்படுகின்றன. நிகழ்ச்சிகள் மக்களை ஒருங்கிணைக்கின்றன, ஐக்கியத்தை வலுப்படுத்துகின்றன என்பது உண்மைதான். அதேசமயம் விசுவாசிகளின் ஆவிக்குரிய மரித்த நிலையை மூடும் கவசமாகவும், முகமுடியாகவும் நிகழ்ச்சிகள் விளங்குகின்றன என்பதை மறுக்க இயலாது.

**2:4** தேவனோடு நடக்கும் ஆவிக்குரிய வாழ்க்கையில், வெற்றியடைய தேவனுடன் கூட உள்ள

**தனிப்பட்ட உறவு தானே** முக்கியம்?

- நிகழ்ச்சிகள் முதன்மைப்படுத்தும்போது, தேவனுடைய உறவு இல்லாமலேயே பாட்டுப்பாடலாம், பிரசங்கிக்கலாம், ஜெப ஆராதனை நடத்தலாம் என்ற தவறான வாழ்க்கை முறை ஏற்பட்டுவிடும் அபாயம் உண்டு.

**2:5** வாக்குத்தத்தங்களின் நோக்கம் **ஆபிரகாமை தேவன் பக்கம் திருப்பியது**, அவனைக் குறித்த **தேவ திட்டத்தை அறிந்து கொள்ளவும்** உதவியது. நீங்கள் சபைக்கு கொடுக்கும் வாக்குத்தத்தங்கள் அல்லது சபை பெறும் வாக்குத்தத்தம் இந்த இரண்டு அடிப்படைச் சத்தியத்தைச் சார்ந்ததாக இருக்க வேண்டும்.

- நீ பெரிய ஆளாவாய் என்ற வெறும் வாக்குத்தத்தம் பெறுவதால் என்ன பிரயோஜனம்?

பெரிய ஆளாவது **எதற்கு? என்ன** செய்யப் போகிறாய்? என்பதை அறியவும், அதைச் செய்ய திடப்படுத்தவுமே **வாக்குத்தத்தங்கள்** ஆபிரகாமிற்கு கொடுக்கப்பட்டது. நமக்கும் கொடுக்கப்படுகிறது என்ற உண்மையை அறிவோம். அப்போது தான் வருடாந்திர வாக்குத்தத்தங்கள் ஒரு மத கொண்டாட்டப் **பரிசாக,** சடங்காக இராது.

## III தீர்வு?

**3:1** ஒரு சபை தான் **எதற்காக ஏற்படுத்தப்பட்டது** என்ற நிலையை உணராமல், ஒரு விசுவாசி தன் வாழ்வில் நோக்கத்தை அறியாமல் கடமைக்கு வாழ்ந்தால் 'வாக்குத்தத்தம்' என்பது 10 பிரசங்கங்களில் ஒன்று; என்றே கருதுவார். அதன் முக்கியத்துவமும் இழந்துவிடும்.

**3:2** ஆபிரகாமே நீ யார் தெரியுமா? நீ என்ன செய்ய வேண்டும் தெரியுமா? என்பதை அவன் அறிந்துகொள்ள முதலாவது கர்த்தர் பேசுகிறார். அதை விசுவாசித்துக் கீழ்படியும்போதே அது எப்படியாகும் என்ற கேள்விக்குப் பதிலாக கர்த்தர் கொடுத்த உறுதிமொழியே **வாக்குத்தத்தம்** என்றாகிறது.

**3:3** எந்த ஒரு தரிசனமுமில்லை, இலக்கும் இல்லை, நோக்கமும் இல்லை என்பவர்களுக்கு வாக்குத்தத்தம் என்பது மற்றொரு பிரசங்க வாக்கியமே.

**3:4** இன்று செய்ய வேண்டியது, நான் யார்? நான் எதற்கு ஏற்படுத்தப் பட்டிருக்கிறேன்? என்ற சுய ஆய்வும், கர்த்தர் வெளிப்படுத்தும் உங்களைக் குறித்த தரிசனத்தோடு-வாக்குத்தத்தங்களை இணைப்பதுமே இப்பிரச்சனைகளுக்குத் தீர்வாக அமையும்.

**இறுதியாக :** உங்கள் சபையில் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் காலாண்டரில் அலங்காரமாக தொங்குகிறதா? அல்லது மக்களையும் சபையையும் இயக்கும் உந்து சக்தியாக இருக்கிறதா? என்பதை சிந்தியுங்கள். அதுவே நலமான புத்தாண்டு கால துவக்க சிந்தனையாக இருக்கும்.

ASSEMBLIES OF GOD

# ANTIOCH BIBLICAL SEMINARY & COLLEGE

TEACHING THE TRUTH IN LOVE

**Affilliated with the Tamil District Council of SIAG**

**Accredited by Asia Theological Association**

## Courses Offered:

| Courses | Duration | Qualification |
|---|---|---|
| B.Th. | 3 Years | 12th Pass |
| M.Div. | 2/3 Years | B.Th. (ATA)/any University Degree |
| Dip.Th. | 2 Years | 10th Pass |

M.Th. Program

**Christian Theology** / **Religion & Philosophy**

- A Non-Residential Course / - A Residential Course is on the anvil

**For More Details:** College Reopens on the First Week of June

**09865209821, 09894896808**

**E-Mail: abscollege@gmail.com Website: www.antioch.in**





# பிரகாசிப்பிக்கிற தேவன்



Rev. **Steve Asir**
(President - Christ's Ambassadors)

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் கிறிஸ்துவின் ஸ்தானிகர் வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்! தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த ஆண்டு முழுவதும் நம்மை நடத்தின தேவன் இந்த 2024 ஆம் வருடத்திலும் மகிமையாய் நடத்துவார். இவ்வாண்டு “பிரகாசிக்கும் விளக்கு” என்கிற தலைப்பின்கீழ் நாம் ஒவ்வொருவரும் தேவனுக்காய் பிரகாசிக்க ஜெபிக்கவும், அர்ப்பணிக்கவும், கற்றுக்கொள்ளவும் தேவன்தாமே கிருபை தருவாராக. நம்முடைய பிரதேசத்திலுள்ள எல்லா சபைகளிலும் உள்ள வாலிபர்கள் தேவநாம மகிமைக்காகவும், சபைக்குள் இருக்கும் வாலிபர்கள் பிரகாசிக்கவும், சபைக்கு வெளியே இருக்கும் வாலிபர்கள் வெளிச்சத்துக்குள் வரவும் பிரயாசப்பட, பிரகாசிக்க தேவன் பலப்படுத்துவாராக.

ஓர் பிரகாசிக்கும் விளக்கு தன் ஒளியை பிரகாசிக்கப்பண்ண மூன்று காரியங்கள் அத்தியாவசியமானது. அவைகள்

1. **விளக்குத்தண்டு (Foundation)**
2. **எண்ணெய் (Fuel)**
3. **திரி (Filament)**

அதுபோல ஒவ்வொரு வாலிபனுடைய கிறிஸ்தவ வாழ்வு பிரகாசிப்பதற்கு அடிப்படை உபதேசங்கள், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் மற்றும் அர்ப்பணிப்பின் வாழ்வு மிக அவசியமானது.

**தேவன் நம்மை பிரகாசிப்பிக்கும்போது உண்டாகும் ஆசீர்வாதங்கள்:**

*“கர்த்தர் நம்மை பிரகாசிப்பிக்கிற தேவனாயிருக்கிறார்...” சங்கீதம் 118:27*

ஆம், தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைத் தேவனாகிய கர்த்தர் பிரகாசிப்பிக்கிறார். அவர் நம்மை பிரகாசிக்கச் செய்யும்போது நம்மில் உண்டாகும் ஆசீர்வாதங்களை ஒவ்வொன்றாய்த் தியானிப்போம்.

**1. பிரகாசித்து சமாதானம் தருகிறார்**

*எண்ணாகமம் 6:25, 26*

*25 கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர்.*

*26 கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர் என்பதே.*

எங்கே வெளிச்சம் இருக்கிறதோ அங்கே தடுமாற்றம் இல்லை, தெளிவு உண்டாயிருக்கும், தெளிவான பார்வை இருக்குமானால் உள்ளத்தில் சமாதானம் நிலைப்படும். தாவீது வாலிபனாய் வனாந்தரத்தில் தன் ஜீவன் தப்ப அலைந்தபோதும் கர்த்தரை நோக்கிப்பார்த்தான். (சங்கீதம் 34:5 – அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை). கர்த்தர் அவனை பிரகாசிக்கப்பண்ணினார். அதினால் சற்றும் கலங்காமல் தன் இருதயத்தில் சமாதானத்தோடுள்ள தெளிவில் சவுலைக் கொன்றுபோட வாய்ப்பு உண்டானாலும் தெளிவாய் அவன் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவன் என்று சொல்லிப் பாவத்திற்கு விலகித் தன்னைக் காத்துக்கொண்டான்.

### 2. பிரகாசித்து முன்னேறப்பண்ணுகிறார்

*2 கொரிந்தியர் 4:6-9*

*6 இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்.*

*7 இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.*

*8 நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை, கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை;*

*9 துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை.*

வீட்டில் மின்சாரம் தடைபட்டவுடனே அம்மா தன் பிள்ளைகளை 'அசையாமல் எங்கே இருக்கிறாயோ அங்கேயே நில்' என்று கூறி, விளக்கைக் கொண்டுவருவாள். இதன் காரணம் பிள்ளைகள் இருளில் எங்காவது இடித்துக்கொள்ளக்கூடாது என்பதற்காக. பிரகாசம், வெளிச்சம் இவைகளே முன்னே இருக்கும் பாதைகளைக் காட்டும். இருள் சூழ்ந்த இடத்தில் ஒரு அடி முன்னே வைப்பதும் ஆபத்தானது. *(சங்கீதம் 119:105 – உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது)*. யோசேப்பின் வாழ்க்கையில் எத்தனை இருள் போன்ற சூழ்நிலைகள் வந்தாலும் கர்த்தரின் வார்த்தை அவனைப் புடமிட்டுக்கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தினால் எல்லாவற்றையும் மேற்கொண்டு தேசத்தின் மேன்மையான ஸ்தானத்திற்கு முன்னேறினான்.

### 3. பிரகாசித்து விடுவிக்கிறார்

*சங்கீதம் 80:3,7,19*

*3 தேவனே, எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும், உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.*

*7 சேனைகளின் தேவனே, எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும், உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.*

*19 சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, எங்களைத் திரும்பிக்கொண்டுவாரும்;*
*உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.*

பிரகாசம், வெளிச்சம் உண்டாகும்போது நாம் எங்கே சிக்கியுள்ளோம் என்பதைப் பார்க்கமுடியும், அதுவே நாம் நம்மை விடுவித்துக்கொள்ள உதவும். யோபு தன்னுடைய சோதனைக் காலங்களில் தேவனையும் அவர் பிரசன்னத்தையும் விரும்பி (*யோபு 29:3 — அப்பொழுது அவர் தீபம் என் தலையின்மேல் பிரகாசித்தது; அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்துபோனேன்*) என்று இழந்த யாவற்றையும் திருப்பிக்கொண்டான்.

அன்பான வாலிபரே! தேவன் இவ்வாண்டிலே உங்கள் ஒவ்வொருவரையும் பிரகாசிப்பிக்க. கர்த்தரை நோக்கிப்பாருங்கள், வசனத்தில் வாழுங்கள், தேவப்பிரசன்னத்தையே விரும்புங்கள்!



*“நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்...” மத்தேயு 5:14* என்ற இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் உங்கள் வாழ்வில் நிறைவேறி நாம் அனைவரும் பிரகாசிக்கக் கர்த்தர் கிருபை தருவாராக. இன்னும் அதிகம் தேவனோடு கிட்டிச்சேர இவ்வருடத்தில் நமது **CA**-வின் மூலம் நடைபெறுகிற மெகா வேதவினா போட்டியில் கலந்துகொள்ளுங்கள், **QUIZMAX** புத்தகம் வாங்கிப் பயனடையுங்கள், மாதந்தோறும் கடைசித் திங்கள் மாலை 7 மணிக்கு **ZOOM** மூலம் நடைபெறும் **CYLC**–ல் கலந்துகொள்ளுங்கள், கர்த்தரில் நிலைத்திருங்கள், சபையோடு இணைந்திருங்கள், கிறிஸ்துவின் ஸ்தானிகர் இயக்கத்தில் பங்கெடுங்கள்.

கர்த்தர் தாமே உங்களை **ஆசீர்வதிப்பாராக!**

---

## பரிபூரண ஜீவன் போட்டி எண் -3 (சரியான விடைகள்)

1. யோகெபேத் (6.20).
2. சிப்பிராள் பூவாள்: (1:15).
3. மிரியாம் (15:20).
4. சிப்போராள் (2:21).
5. எலிசபாள் (6:23).
6. மாசா, மேரிபா (17:7).
7. எத்திரோ (18:1,2,5,12).
8. பார்வோன் (14:8; 6:11; 13,27).
9. ஆரோன் (7:7).
10. கோகாத் (6:18).
11. எகிப்திலே (12:30).
12. மாராவின் (15:23).
13. சீனாய் மலையின் கொடுமுடியிலே (19:20).
14. கோசேன் நாட்டில் மட்டும் (9:26).
15. ஓரேபிலே (17:6).
16. எகிப்து தேசம் எங்கும் (10:22).
17. சீனாய் மலையின் மேல் (19:18).
18. தேவபர்வதமாகிய ஓரேப் மட்டும் (3:1).
19. வீடுகளிலும், முற்றங்களிலும் வயல்களிலும் இருந்த (8:13).
20. எகிப்துக்கு (4:19).



# மிகைப்படுத்தப்பட்ட கிருபை

## (Hyper Grace) பகுதி-2

**Rev.M. ஜான் செலின் M.Th.,**

பெத்தேல் ஏ.ஜி. சர்ச். அருமனை

கிறிஸ்துவில் பிரியமான பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் அன்பின் வாழ்த்துக்கள். "மிகைப்படுத்தப்பட்ட கிருபை" என்ற கட்டுரையின் முதல்பாகம் அனைவருக்கும் பயனுள்ளதாக இருந்திருக்கும் என்ற நம்பிக்கையில் தொடர்ந்து கவனிக்க கர்த்தர் கிருபை செய்வாராக

### G. இரட்சிப்பின் சத்தியத்தை நிரந்தரமாக்கி ஏனோ தானோ என்று வாழ்வார்கள்

ஒருமுறை நாம் இரட்சிக்கப்பட்டால் நிரந்தர இரட்சிப்பு என்றும், அதற்கு பின்னர் என்ன தவறு செய்தாலும் அது பலவீனம் என்று மல்லுக்கட்டுவார்கள்.

மனம் திரும்பி பாவங்களை அறிக்கை செய்தப்பின், தேவன் நமக்கு இரக்கம் கட்டளையிட பாவி என்ற அந்தஸ்த்தை மாற்றி நம்மை நீதிமானாக்கினார். ஆனால் அதற்கு பின்னர் அந்த இரட்சிப்பில் நாம் வளரவும், அதில் பிரயாசப்பட வேண்டும் என்றும் பவுல் பிலி.2:12 இல் சொல்கிறார். ஒரு தரம் இயேசு கிறிஸ்து மூலம் பிரகாசிக்கப்பட்டு அவரின் அன்பை ருசிப்பார்த்து விட்டு மறுபடியும் அவரை விட்டு விலகி அவரின் கிருபையின் சுவிசேஷத்தை நிந்தித்தால் அவன் பின்னிலைமை பரிதவிக்கபடத்தக்கது என்றும் அவன் நியாயதீர்ப்புக்கு பாத்திரவான் என்றும் எபி.10:27-29.6:4-8; 2பேதுரு 2:20-22; 1பேதுரு 4:17-19 மற்றும் ரோமர் 6:14 ஆகிய வசனங்களில் பார்க்கின்றோம்.

இயேசு கிறிஸ்துவின் மூலம் பெற்ற இரட்சிப்பை குறித்து கவலையற்ற நிலையில் இருந்தால் எப்படி நாம் கோபாக்கினைக்கு தப்புவோம் என்று எபி 2:4 பார்க்கிறபடி வரும் கோபாக்கினைக்கு தப்ப நீதியின் மேல் நீதி, பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தம், மகிமையின் மேல் மகிமை, கிருபையின் மேல் கிருபை பெற்று நீதியில் அன்பில் பரிசுத்தத்தில் பூரணமடைந்து பாடுகளின் வழியாக கடைசிவரை நிலைத்து நிற்க வேண்டும். அப்போது தான் நாம் பூரண இரட்சிப்படைவோம். அதன் மூலம் நித்திய ஜீவன் மற்றும் பிரதிபலன்களான சுதந்திரங்களை கர்த்தர் நமக்கு கொடுப்பார் என்று 1 பேதுரு 1:5-16 வசனங்களில் பார்க்கின்றோம். ஆம் நாம் இரட்சிக்கப்பட்டோம், தொடர்ந்து உலகம் பாவம் சாபம் பிசாசு மற்றும் பாடுகளில் இருந்து இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறபடியால் வரப்போகும் கோபக்கினைக்கு நாம் தப்புகிறோம். அதற்கு உதவி செய்வது தான் கிருபை.

### H. பாவத்தை கண்டுக்கொள்ளாமல் சமரசம் செய்வார்கள்

இவர்கள் பாவம் இல்லை என்பார்கள். பாவத்தை கண்டித்து உணர்த்த மாட்டார்கள். பாவம் செய்யும் ஆத்துமா சாகும் என்பதை எண்ணமாட்டார்கள். கிருபையில் மிகுதியான தேவன் நம் பாவத்தை ஒரு பொருட்டாக எண்ணமாட்டார் என்பார்கள். பாவத்தில் இருந்து விலக கொடுக்கப்பட்ட கிருபையை பாவம் செய்ய உரிமமாக கருதுவார்கள். தற்கால, வருங்கால பாவத்தின் விளைவை எல்லாம் கடந்த கால விளைவை போன்று இயேசு கிறிஸ்து சிலுவையில் ஏற்றுக்கொண்டார் என்பார்கள்.

ஆனால் நாம் பாவத்தில் தொடர்ந்து இருக்கக்கூடாது என்றும், பாவத்தை எதிர்ப்பதில் இரத்தம் சிந்தத்தக்கதாக போராட வேண்டும் என்றும், இஸ்ரவேல் மக்கள் நடுவில் வந்த பாவ காரியங்கள் மற்றும் அதன் மூலம் கிடைத்த தண்டனைகள் நமக்கு திருஷ்டாந்தமாக கொடுக்கப்பட்டு இருக்கிறது என்றும் எபி.3:13;12:15;10:26-27; ரோமர் 6:11-23; 8:13; யாக்.1:14-16; 4:8-17; 5:16; 1கொரி. 10ம் அதிகாரம், 2கொரி. 7:1, 15:14; 1யோவான் 1:7-10;5:16-17; 1பேதுரு 4:18 மற்றும் எபே.4:26 ஆகிய வசனங்களில் பார்க்க முடியும்.

பரிசுத்த ஆவியானவர் நாம் பாவம் செய்யும்போது கண்டிக்கிறார். கர்த்தரின் இருதயத்திற்கேற்ற தாவீது பாவம் செய்தபோது கூட கர்த்தர் குறுக்கிடுகிறார். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் கேட்ட புதிய ஏற்பாட்டு விசுவாசிகளின் இருதயமும் குத்தப்பட்டது. பாவத்தின் சம்பளம் மரணம் என்றும், பாவத்தில் இருந்து மனம் திரும்ப வேண்டும் என்றும், பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிட வேண்டும் என்றும், விழுந்த நிலையை உணர்ந்து பாவத்தை சரிசெய்ய வேண்டும் என்றும், சத்திய வசனம் அறைகூவல் விடும்போது இவர்கள் பாவம் ஒரு பொருட்டல்ல என்று சொல்வது வேடிக்கையான ஒன்றாக தான் கருத வேண்டும். பாவத்தை சரி செய்ய யாதொருவன் தன்னை தாழ்த்தி மனம் திரும்புகிறாரோ, அவருக்கு தான் கிருபையின் பூரண பலன் கிடைக்கிறது.

### I.வேதவசனத்தை பெரும்பாலும் ஊக்க பிரசங்கங்களாக வியாக்கியானம் செய்வார்கள்

இவர்கள் பழைய ஏற்பாடு நமக்கு தேவை இல்லை அதை எல்லாம் இயேசு கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றி விட்டார் என்று சொல்லிக்கொண்டே அதில் உள்ள வாக்குத்தத்தங்கள், செழிப்பு, ஆசீர்வாத வசனங்கள் மற்றும் ஊக்க வசனங்களை மட்டும் தங்களுக்கு சாதகமாக எடுத்துக் கொள்வார்கள். பக்தி விருத்தியை விட பொருளாதார விருத்தியை குறித்த வசனங்களை தேடி கண்டுபிடிப்பார்கள். கெத்தான வாழ்க்கை, உலக ஆசையை தூண்டும் பிரசங்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

சாதுரியமாக, நவமான, நூதனமான, செவிக்கினிய காரியங்களை குறித்து மட்டும் பேசுவார்கள். நடக்காத காரியத்தை இந்த உலகில் நடக்க வைக்க முடியும் என்று பேசுவார்கள். குறிப்பாக சாவாமை குறித்து அதிகம் பேசுவார்கள். கஷ்டமில்லாத, ஒழுக்கமில்லாத, பாடுகள் இல்லாத உயர்வை எல்லாம் குறித்து பிரசங்கம் செய்வார்கள். இயேசு கிறிஸ்துவின் மலை பிரசங்க செய்தி இவர்களுக்கு புரியாத புதிர். தீமையின் ஆணி வேர்களை குறித்து அவர் சொல்லி இருக்கின்ற காரியங்களை அற்பமாக பார்ப்பார்கள்.

ஆனால் வேத வாக்கியங்கள் எல்லாம் நாம் சீர்ப்படவும், நீதியை அறியவும், நாம் கற்றுக் கொள்ளவும், நாம் உபதேசிக்கப்படவும், தேவ சித்தம் இன்னதென்று அறியவும், நித்திய ஜீவனையடையவும், பரிசுத்தமாகவும், இயேசு கிறிஸ்துவை அறியும் அறிவை அடையவும், சோதனைக்கு தப்பவும், இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாகவும், புத்தியடையவும், பக்திவிருத்தியடையவும் அதே நேரத்தில் ஆறுதல் அடையவும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. 2 தீமோ.3:16-17 என்பதை இவர்கள் வலியுறுத்த மாட்டார்கள்.

**J. தேவப்பிரியர்கள் என்பதை விட சுயப்பிரியர்களாக இருப்பார்கள்**

இவர்கள் கனியுள்ள வாழ்க்கையை விட வரங்கள் உள்ள வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து அந்த வரங்களை தங்கள் சுய லாபத்திற்காக பயன்படுத்துவார்கள். தேவனை பிரியப்படுத்தவும், அவரின் சித்தம் அறியவும் விரும்ப மாட்டார்கள். இந்த உலகில் மேன்மையடைய வேண்டும், உலகத்தில் அந்தஸ்து மற்றும் அதிகாரத்துடன் வாழ வேண்டும் என்பதையே நோக்கமாய் கொண்டு வாழ்வார்கள். தங்கள் சுயக்காரியங்களை அடைய கிருபையை பயன் படுத்துவார்கள். விசேஷமாக தேவன் ஊழியத்திற்காக கொடுத்த வரங்களை அவர்கள் சுய லாபத்திற்காக பயன்படுத்தி பாருங்கள். எங்களோடு தேவன் இருக்கிறார் என்று பிறர் மத்தியில் தங்களை ஒரு பொருட்டாக எண்ணி பெருமையாக கருதுவார்கள். தேவன் ஒருவருக்கு கொடுத்த வரங்களையும், அழைப்பையும் மாற்றுவது இல்லை. அது அவரது உண்மையின் சுபாவம். ஆனால் இவர்கள் அவற்றை தங்கள் காரியத்திற்காக காய் நகர்த்தி பெருமைப்பட்டுக் கொள்வார்கள். தேவனை பிரியப்படுத்துவதை விட தங்கள் சுயம் மற்றும் பெயர் புகழ் அடைய வேண்டும் என்று விரும்புவார்கள்.

ஆனால் வேதத்தில் ஒரு கண்காணி எப்படி இருக்க வேண்டும்! ஊழியர்கள் எப்படி இருக்க வேண்டும் என்றும் பவுல் தீத்து மற்றும் 1,2 தீமோத்தேயு போன்ற போதக நிருபங்களில் அழகாக சொல்லி இருக்கிறார். அதோடு இழிவான காரியங்களுக்காக கர்த்தரை தூஷிக்கும் அளவிற்கு வாழக்கூடாது என்றும் தேவனுக்கு பிரியமாக நடந்து சுயம் வெறுக்க வேண்டும் என்றும், பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தக்கூடாது என்றும், பரிசுத்த ஆவியின்படி ஆவியின் சிந்தை மற்றும் கிறிஸ்துவின் சிந்தையோடு நடக்க வேண்டும் என்றும், தேவ சித்தம் இன்னதென்று அறியவும் தேவனுக்கு பிரியமாக நடக்கவும் மனம் ஒவ்வொரு நாளும் புதிதாக வேண்டும் என்றும் ரோமர் 12:1-6; 2தெச.4:1;2:4; எபே.4:30; வெளி.2:14; 2 கொரி.5:9-10 ஆகிய வசனங்களில் நாம் தெளிவாக பார்க்கின்றோம்.

**K. மறுமைக்குரியதை விட இம்மைக்குரியதை அதிகம் நாடுவார்கள்**

இந்த உலகில் நாம் விரும்பும் நீண்ட நாட்கள் சாகாமல் உயிரோடு வாழலாம் என்றும், இந்த உலகில் பரலோகத்தை அனுபவிக்கவில்லை எனில் வேறு எங்கே போய் அனுபவிப்போம் என்பார்கள். இந்த உலகில் எப்படி சுகபோகமாக, ஆடம்பரமாக, பொருளாதார செழிப்புமிக்க மற்றும் வசதியான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதையே சுற்றி சுற்றி இவர்கள் பிரசங்கம் மற்றும் முகாம்கள் இருக்கும். பேதுரு கேட்டது போன்று என்ன கிடைக்கும் என்பது தான் இவர்கள் நோக்கம். மறுமைக்குரியதை நாடாமல் இம்மைக்குரியதை நாடுகிறவர்கள் பரிதவிக்கப்பட்டவர்கள் என்று I கொரி. 15:19 .இல் பார்க்கின்றோம்.

ஆனால் நமது கிரியைகளுக்கு தக்க பலன் உண்டு என்றும், நாம் மரணத்திற்கு பின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும் என்றும், இயேசு கிறிஸ்து நாம் இந்த உலகில் கெட்டுப்போகாதபடி நம்மை உருவாக்கி சீஷத்துவ பாதையில் நடத்தி நித்திய கிருபைக்கு நேராக நடத்துவார் என்றும், மரணத்திற்கு பின்னர் நரகம் மற்றும் மோட்சம் அவரவரின் தீர்மானத்தின் அடிப்படையில் கிடைக்கும் என்றும், இந்த உலகம் முழுவதும் ஆதாயம் செய்தாலும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் லாபம் என்ன என்றும் வசனம் நமக்கு தெளிவாக சொல்லுகின்றது. தேவ திட்டம் மற்றும் சித்தம் செய்யாதோர் புறம்பான இருளாகிய

நரகத்தில் தள்ளப்படுவார்கள் என்றும், இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவருக்காக பாடுகள் அனுபவிக்கும் ஒவ்வொருவரும் அவரோடு ஆளுகை செய்வோம் என்றும் தெளிவாக வசனம் எடுத்து உரைக்கிறது. (மத்.22:13; ரோமர் 6:23; வெளி.21:1-8; 20:13-14; ரோமர் 4:15).

### இவர்களின் பொதுவான சுபாவங்கள்

1. இயேசு கிறிஸ்துவை விட தங்களை முன் நிறுத்துவார்கள்.
2. தங்களுக்கு புகழ் மகிமை தேடுவார்கள்.
3. கனிகளை விட வரங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள்.
4. இரட்சிப்பு, சீஷத்துவம், நித்திய ஜீவன் போன்ற சத்தியங்களை விட மாம்ச, உலக ஆசை இச்சைகளை தூண்டும் செய்திகளை கொடுப்பார்கள்.
5. பொருளாசை, பணம், ஒருநாள் இன்பம் என்று வாழ்வார்கள்.
6. விசித்திர, தந்திரபேச்சு, நூதன வியாக்கியானம், கட்டுக்கதை, கிழவி பேச்சை பேசி ஜனங்களை வஞ்சிப்பார்கள்.
7. பயபக்தியற்ற வாழ்வு, நிர்விசாரம், கர்வம், கெட்ட நடக்கை கொண்ட சுபாவம் கொண்டவர்கள்.
8. வேத சட்டத்திற்கு புறம்பான காரியங்களை விசுவாசம் என்ற பெயரில் நடக்க நம்புவார்கள்.
9. போஜனபிரியர்கள் மற்றும் சுகபோக வாழ்க்கையை விரும்புவார்கள்.
10. சுவிசேஷம் அறிவித்து ஆத்தும ஆதாயம் செய்வதை விட இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளை குழப்பி ஆள் சேர்ப்பார்கள்.

(2பேதுரு 2:1-22; யூதா 1 ஆம் அதிகாரம்,1 தீமோ 1:3; 4:7; 2தீமோ. 2:15-26; 3:1-16 , 4:4)

### இவர்களுக்கு தப்புவது எப்படி?

1. **கிருபை விருதாவாக்கப்படும் என்ற எச்சரிப்பு வேண்டும்:** கிருபை இழக்கக்கூடிய போக்கடிக்கக்கூடிய, புரட்டப்படக்கூடிய ஒன்று என்பதை உணர்ந்து கிருபையின் மதிப்பை உணர வேண்டும் (எபி.12:15; யோனா 2:8;கலா.2:21; 2கொரி.6:1. யூதா 1:4). எனவே கிருபையை உணர மனம் திரும்பி மாறுபாடுகளுக்கு விலக வேண்டும்.
2. **கிருபையில் விருத்தியடைய வேண்டும்:** கிருபை விருத்தியடைய வேண்டும். ஆவியின் கனிகளான அன்பு, இரக்கம், விசுவாசம் பரிசுத்தம், நீதி, தாழ்மை, கீழ்படிதல், தேவபயம் பெருகும் போது கிருபையும் பெருகுகின்றது. எபே.4:7-15, 2 பேதுரு 3:18, லூக்.2:52, யாக்.4:6. நாம் கிருபையால் பெற்ற நீதிமான் என்ற அந்தஸ்த்தில் பெருக வேண்டும். அந்த பரிசுத்தத்தில் பெருக வேண்டும். இயேசு கிறிஸ்துவின் கிருபை சகல ஞானத்தோடும் புத்தியோடும் நம்மில் விருத்தியடைய வேண்டும்.
3. **அவரவர் கிருபையில் பிரயாசப்பட வேண்டும்**: நாம் இரட்சிக்கப்படவும், பலப்படவும், பயன்படவும், ஊழியம் செய்யவும், அழைப்பை நிறைவேற்றவும், பக்திவிருத்தியடையும் கிருபை தேவை. அந்த கிருபையை அவர் ஒவ்வொருவருக்கும் தருகின்றார். பெற்ற கிருபையின் அளவு மற்றும் வரங்களின் படி நாம் பிரயாசப்பட வேண்டும் (கொரி. 15:10).

4. **பெற்ற கிருபையில் நிலைத்து இருக்க வேண்டும்:** கிருபையில் நிலைத்து இருத்தல் என்றால் கிருபையின் உறைவிடமாக இருக்கும் இயேசுவில், அவரது சத்துவத்தில் நிலைத்து இருத்தல் அல்லது பெலப்படுதல் என்று பொருள். இயேசுவின் வார்த்தை, அவரது அன்பு, சகிப்புத்தன்மை, அவர் தந்த அழைப்பு, அவர் நிமித்தம் வரும் பாடுகளில் நிலைத்து இருந்தால் அவரின் கிருபையிலும் நிலைத்து இருப்போம் (2 தீமோ.2:1-7; 2 கொரி. 12:9).
5. **கிருபையை கருத்தாக ஆராய வேண்டும்:** தேவன் நமக்கு கொடுத்த கிருபைகளை பகுத்தறிய வேண்டும். பரிசோதிக்க வேண்டும். படிக்க வேண்டும். வசனத்தின்படி தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். தேவ கிருபையில் தெய்வீக சுபாவங்கள் இருக்கும் என்பதை அறிய வேண்டும். இயேசு கிறிஸ்துவின் கிருபை நம்மில் புத்தியோடும் ஞானத்தோடும் பெருகிறது என்றும் இயேசு கிறிஸ்துவை அறியும் அறிவு நமக்கு கிருபை தருகின்றது என்பதையும் நாம் பார்க்கின்றோம். 1 பேதுரு 1:10. அறிவை உணர்த்தவும், ஞானத்தை போதிக்கவும், பகுத்தறியவும், நிதானிக்கவும் கிருபையை நாம் பெற்று இருக்கிறோம் (எபே.1:7-8).
6. **கிருபையை பரிசுத்தவான்கள் ஐக்கியத்தில் நாட வேண்டும்:** தேவ சபையில் கிருபையை சிந்திக்க வேண்டும். கிருபையை குறித்து பாட வேண்டும். சத்தியம் நிறைந்த நமது AG சபைகளை விட்டு பிரியக்கூடாது. ஆரோக்கியமான வசனங்களை பேச கேட்க வேண்டும். அந்தியோகியா சபையில் சாதகமற்ற சூழலில் சுவிசேஷம் அறிவித்தல், ஜெபித்தல், வரங்களை பயன்படுத்துதல், உபவாசம் செய்தல், பயபக்தியோடு ஆராதனை செய்தல், ஊழியம் செய்தல் போன்ற காரியங்கள் இருந்தது. அவர்கள் நடுவில் தான் கிருபை இருந்தது. இயேசு கிறிஸ்துவை குறித்து சுவிசேஷம் அறிவிக்கும் சபையில் பூரண கிருபை இருக்கும். சங்.48:9,52:2; அப்.4:33,11:23; எபி.12:28. விருப்பு வெறுப்புகள் மற்றும் கசப்புக்களை களைந்துவிட்டு சபை ஊழியர்களோடு சேர்ந்து ஒவ்வொருவரும் சுவிசேஷம் அறிவிக்க வேண்டும். அங்கு தான் பூரண கிருபை இருக்கும்.
7. **கிருபையை காத்துக்கொள்ள வேண்டும்:** உண்மை, நம்பிக்கை, விசுவாசம், இயேசு கிறிஸ்துவை அறிக்கை செய்தல், நீதி, நேர்மை மற்றும் சத்தியத்தின்படி நடக்கும்போது நாம் பெறும் கிருபையை காத்துக்கொள்ள முடியும். கர்த்தரை நம்புகிறவர்களை கிருபை பின்தொடரும் (உபா.7:12; 1இராஜா.3:6;8:23). அந்த கிருபையை காத்துக்கொள்ள இயேசு கிறிஸ்துவிடம் தைரியமாக வர வேண்டும். (எபி.4:16)

பெரும்பாலும் இந்த மிகைப்படுத்தப்பட்ட கிருபையின் உபதேசக்காரர்கள் ஏதோ ஒரு விஷயத்தில் அதாவது பொருளாதாரம், அவமானம், புகழ், தரித்திரம், பாவ ஆசைகளை விட முடியாமை போன்ற காரியங்களில் ஏமாற்றங்கள் மற்றும் நெருக்கடிகளை சந்தித்து இருப்பார்கள். அவைகளை சமாளிக்கவும், சமரசம் செய்யவும் தங்கள் ஆசை இச்சைகளை நிறைவேற்றவும், கிருபையை கேடயமாக பயன்படுத்தி, அதை புரட்டி ஆரோக்கியமான உபதேசத்தை விட்டு விசுவாச பிள்ளைகளை கவிழ்த்து போடுகிறார்கள். எனவே நாம் இவர்களை விட்டு விலகி சத்தியம், பரிசுத்தம், மகிமை நிறைந்த இயேசு கிறிஸ்துவில் தைரியமாக கிட்டி சேர வேண்டும். என்ன பாடுகள் வந்தாலும் அவரில் நிலைத்து இருந்து பூரண கிருபைகளை சுதந்தரிக்க வேண்டும். ஏனெனில் அவர் இப்படிப்பட்டவர்களுக்கு அதிகமான கிருபைகளை தந்து இருக்கிறாரே. பவுலின் சரீர பெலவீனத்தில் கிருபை என்னும் பெலனை கொடுத்து தாங்கினதுபோல நம்மையும் நடத்துவாராக! கர்த்தர் நல்லவர். அவர் கிருபை என்றுமுள்ளது.

ஊழிய அழைப்பு பெற்ற
பெண்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு

# திரித்துவ வேதாகமக் கல்லூரி

(A Theological Institution of the Tamil District Council of SIAG)
Accredited by Asia Theological Association (ATA)

திரித்துவ வேதாகமக் கல்லூரி, மாணவிகள் தங்கி படிப்பதற்கான
சிறந்த, நவீன வசதிகளைக் கொண்டுள்ளது.
அர்ப்பணிப்புள்ள சிறந்த கல்வித் தகுதியுடைய ஆவிக்குரிய
அனுபவமிக்க ஆசிரியர்களைக் கொண்டு போதிக்கப்படுகிறது.

| Course | Duration | Eligibility |
|---|---|---|
| Master of Divinity (M.Div.) English | 3 Years | Any Bachelor Degree |
| Bachelor of Theology (B.Th.) - English | 3 Years | HSC (+2) Pass |
| Diploma in Theology (Dip.Th.) - Tamil | 2 Years | S.S.L.C Pass |

2024-2025-ம் கல்வியாண்டிற்கான மாணவியர் சேர்க்கை
நடைபெற்று கொண்டிருக்கிறது.
விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை
பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டிய இணையதள முகவரி
www.trinitybiblecollege.in

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் வந்து சேர வேண்டிய
**கடைசி நாள் : மே 20, 2024**

தொடர்பு : The Registrar
**Trinity Bible College**
Kanakkapillaivasai, Post Box No. 25, Sengottai - 627 809
Phone : 04633 - 234243 & 99942 47117, 75985 43752

# 4 ANSWERS TO PRAYER



We must remember that answers to prayers will come in several ways from God:

**1. There is a DIRECT answer.**

Sometimes we pray for a specific request and it is answered at once, without any delay. It is very thrilling to see God respond instantly by granting our request that we had prayed about. All of us are full of joy when God answers our prayers in this way (James 1:5; 5:17; I Kings 18:36-38; Matt. 20: 33,34; Acts 9:40).

**2. There is a DELAYED answer**

God sometimes has the intention of granting our request, but delays the answer. God sometimes intentionally postpones answering our prayers to teach us patience and faith (James 1:4; Romans 4:21). God knows when it's the best time to grant the request that we have prayed about. We should not become discouraged if our request is not granted at once (Luke 11:9-10; 18:1-8; Matthew 15: 21-28). We must allow God to work within His own sovereign timetable (Ecclesiastes 3:11).

**3. There is a DIFFERENT answer.**

Because of unknown selfishness and short-sightedness, we are not always aware of what we really need. We may boldly ask for something; however, we might still unknowingly ask in a selfish manner. Therefore, God sometimes changes the way that He decides to answer the prayer that we offer up to Him. He has the right to do this as He did with the apostle Paul (2 Cor. 12:7-9). Paul unknowingly prayed for relief but God changed the answer to his prayer by giving him grace instead of relief. God can give us a different answer to our prayers.William Culbertson said;

"Keep praying, but be thankful that God's answers are wiser than your prayers!"

**4. There is a DENIED answer.**

Nobody likes to recognize denial as an answer to prayer. God may decide to deny our request simply because it did not align with His will or purpose for our lives. Sometimes we may think that God does not answer our prayers when we pray to Him because He does not give us what we ask for. The fact of the matter is this, God did answer your prayer, you just missed the answer! God said, "No." When God says "No" this is an answer to prayer (1 Kings 19:4). Elijah prayed that he would die, but his foolish request was denied. Other examples- Moses' Request (Deut.3:23-26), Zebedee's Wife Request (Matthew 20:21-23), Delivered man's Request (Mark 5:18-20).



# வெற்றியின் விலை

## The Cost of the Victory

Rev.ஜான் பரணீஸ்வரன்

உதவி இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்

**முன்னுரை:** இந்த உலகத்தில், எதைப்பெற வேண்டுமானாலும், அதற்குரிய விலையைக் கொடுக்க வேண்டியது அவசியம். படிப்பில், தொழிலில், வாழ்வில் வெற்றிபெற, நாமும் சிலவற்றை விலையாக கொடுக்க வேண்டியது அல்லது முதலீடு (Investment) பண்ணவேண்டியது அவசியமாகும். அப்படி எதை முதலீடு செய்யவேண்டும் என்று இந்த கட்டுரையில் காண்போம்.

**1.Mind Power- மனோசக்தி**

நாம் வெற்றிக்காக கொடுக்கும் முதல் விலை, நமது மனோசக்தியாகும். நமது மனதின் சக்தியை, படிப்பில் முதலீடு செய்தால் நாம் வெற்றி பெறலாம். நமது மனதின் சக்தி மூன்று விதத்தில் வெளிப்படும்.

i. Concentration-கவனம்

ii. Memory Power-ஞாபகசக்தி (அ) நினைவாற்றல்

iii. Self Confidence -தன்னம்பிக்கை

இந்த மூன்றும் நாம் ஜெயிப்பதற்கு அவசியமாகும். ஆனால் நம் மனோசக்தி வெளிப்படாமல், சில காரியங்கள் தடுத்துவிடுகின்றன.

a. The Mind is like a Monkey-மனம் ஒரு குரங்கு போன்றது. அங்கும் இங்கும் தாவாமல், மனதை கட்டுப்படுத்தவேண்டும் (1 பேதுரு-1:13).

b. The Mind is like a Black Board-மனம் ஒரு கரும்பலகை போன்றது. எளிதில் அழுக்கடையும், தூய்மைப்படுத்திக் கொண்டே இருக்கவேண்டும்.

c. The mind is like a balloon-மனம் ஒரு பலூன் போன்றது. எளிதில் உடையக்கூடியது. உறுதியாக பாதுகாக்க வேண்டும் (யோசுவா 1:9).

d. The Mind is like a Pond-மனம் ஒரு குளம் (குட்டை) போன்றது. எளிதில் குழம்பும். தெளிவாக பாதுகாக்க வேண்டும் (தீத்து 2:12).

அப்பொழுது நமது மனோசக்தி வெளிப்பட்டு நாம் வெற்றி பெற முடியும்.

**2.Physical Strength-உடல் வலிமை (சக்தி):**

நாம் வெற்றி பெற, இரண்டாவது முதலீடு செய்ய வேண்டியது, நம் உடல் பலத்தை ஆகும். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்பது போல, சரீரம் ஆரோக்கியமாக இருந்தால் தான்; படிப்பில் சாதிக்க முடியும். பார்வை குறைபாடுகள், செவித்திறன் குறைபாடுகள், சரீர சோர்வுகள், களைப்பு இருந்தால் படிப்பில் சாதிக்க முடியாது. எனவே சரீர ஆரோக்கியத்திற்கு மூன்று காரியங்களை சரிப்படுத்துங்கள்.

i. உணவு-Eat Healthy Food
அளவான, தரமான, சத்தான, சரிவிகித உணவை உண்ணுங்கள்.

ii. உடற்பயிற்சி-Do Simple Exercise
சிறிய, எளிய உடற்பயிற்சியை செய்யுங்கள்.

iii. உறக்கம் (ஓய்வு)-Take Proper Rest

சரியான அளவு தூங்கி ஓய்வு எடுங்கள். அப்போது சரீரம் ஆரோக்கியமாக இருக்கும். அது வெற்றிபெற, சாதிக்க உதவும்.

**3.Talents and Skills-திறமைகள், தாலந்துகள்:**

உங்களுக்கு தேவன், இயற்கையாகவே சில திறமைகள், தாலந்துகளை தந்துள்ளார். அதை படிப்பில் பயன்படுத்துங்கள் வெற்றிபெறலாம்.

i. Reading Skill-படிக்கும் திறமை (படி)

ii. Writing Skill-எழுதும் திறமை (எழுதிப்பார்)

iii. Observation Skill-உள்வாங்கும் திறமை (உள்வாங்கிப் படி)

iv. Animation Skill-உயிரூட்டும் திறமை (கற்பனை செய்துபார்)

v. Communication Skill-தகவல் தொடர்பு திறமை (சந்தேகங்களை கேட்டு தெளிவுபெறு)

**4. Time-நேரம்:**

படிப்பில் சாதிக்க, வெற்றி பெற விரும்புகிறவர்கள், நேரத்தை முதலீடு செய்யவேண்டும். நாம் நேரத்தை...

i. பயன்படுத்தலாம்-We can Use Time

ii. செலவு செய்யலாம்-We can Spend Time

iii.விரயம் செய்யலாம்-We can Waste Time

iv.முதலீடு செய்யலாம்-We can Invest Time

v. தியாகம் செய்யலாம்-We can Sacrifice Time

நேரத்தை செலவு செய்யாமல், விரயம் செய்யாமல், முதலீடு செய்பவர்கள். அதாவது சரியான விதத்தில் செலவிடுபவர்களும், தூக்கம், விளையாட்டு, பொழுதுபோக்கு இவற்றிற்கு கொடுக்கும் நேரத்தை பரீட்சை நேரத்திலாவது, தியாகம் செய்து படிப்பில் செலவிட்டால் வெற்றி பெறலாம், சாதிக்கலாம்.

**5. Full Life- முழு வாழ்வையும்:**

நமக்கு இருப்பது ஒருவாழ்வு, அதை முழுவதும் ஆண்டவரிடம் அர்ப்பணித்துவிட்டால், பள்ளி, கல்லூரி பரீட்சையில் மட்டுமல்ல, வாழ்க்கை முழுவதும் வரும் எல்லா சோதனைகளிலும் வெற்றி பெறலாம். பரலோக பாக்கியத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

100 ஆடுகள் உள்ளவன், ஒன்றை தொலைத்தான்.

1% இழப்பு, அதை மீண்டும் பெற்றான்.

10 வெள்ளிகாசு உள்ளவள், ஒன்றை தொலைத்தாள்.

10% இழப்பு, அதையும் மீண்டும் பெற்றாள்.

2 பிள்ளைகள் உள்ளவன், ஒருவனை இழந்தான்.

50% இழப்பு, காத்திருந்து திரும்பப் பெற்றான்.

ஒரே வாழ்க்கையை, ஐசுவரியவான் இழந்தான்.

100% இழப்பு மீண்டும் பெறமுடியவில்லை.

**முடிவுரை** : இந்த பரீட்சை நாட்களில், நான் எப்படி வெற்றி பெறுவது என்று யோசிக்காமல், உங்களிடம் இருக்கும் நேரம், உடல்பலம், மனபலம், திறமைகளை சரியாய் படிப்பில் பயன்படுத்தினால், நிச்சயம் வெற்றி பெறலாம், சாதனையும் படைக்கலாம். நீங்கள் வெற்றிபெற SFC சார்பாக அன்பின் வாழ்த்துக்கள்.

சிந்திப்போம்! செயல்படுவோம்! வெற்றி வெகு தூரமில்லை!



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan


ஹாய் குட்டீஸ்.. எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? பரிபூரண ஜீவன் சிறுவர் பகுதிக்கு நீங்கள் கொடுத்துவரும் மேலான ஆதரவை உங்கள் கருத்துக்கள் மூலம் அறிந்து தேவனை துதிக்கிறேன். இலட்சியத்தோடு தேர்வு எழுத ஆயத்தமாகி கொண்டிருக்கும் உங்களை மனம் நிறைந்து வாழ்த்துகிறேன். நீங்கள் தேர்வில் வெற்றியடையவும் சாதனையாளர்களாக மாறவும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.ஒரு சுவாரசியமான கதையை உங்களுக்காக வைத்திருக்கிறேன். கதை கேட்க ரெடியா? வாங்க போகலாம்..

ஒரு தந்தையும் மகனும் தங்களுடைய கழுதையை விற்பதற்காக சந்தைக்கு ஓட்டிச்சென்று கொண்டிருந்தனர். அதைப் பார்த்த வழிப்போக்கர்கள் சிலர் இவர்களைப் பார்த்து, இவர்களை பாரேன், அழகான கழுதையை ஓட்டிக் கொண்டு நடந்து சென்று கொண்டிருக்கிறார்கள். இவர்களில் யாராவது அதில் ஏறிச் செல்லலாம். ஆரோக்கியமான கழுதையை கொடுத்த கடவுள் இவர்களுக்கு அதைப் பயன்படுத்த அறிவைக் கொடுக்கவில்லை என்று ஏளனம் செய்தனர்.

இதனால் வெட்கப்பட்டுப் போன தந்தையும் மகனும் ஒரு முடிவு செய்து, வயதில் சிறியவனான மகன் கழுதையின் மேல் உட்கார்ந்து கொண்டு, தந்தை நடந்தவாறே இருவருமாகப் போனார்கள். அப்போது வேறு சில வழிப்போக்கர்கள், இங்கப் பாருடா அநியாயம்! பெரியவர் நடக்கமுடியாமல் நடக்கிறார், இந்த பையன் சொகுசா கழுதை மேல சவாரி செய்கிறான் என்று கிண்டலடித்தனர்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த மகன், இவர்கள் கூறுவதில் நியாயம் இருப்பதாக உணர்ந்ததால் தனது தந்தையைக் கழுதையின் மேல் உட்காரவைத்து, மகன் நடந்தவாறே புறப்பட்டனர். இன்னும் சற்று தூரம் சென்ற பின் ஒரு வழிப்போக்கன் இவர்களைப் பார்த்து கொடுமையை பாரு! நல்லா கொழுத்துப்போய் இருக்கிற பெரியவர், நோஞ்சான் மாதிரி இருக்கிற தன்னோட பையனை நடக்கவிட்டு தான் மட்டும் சொகுசாக கழுதை மேல் ஏறிப்போகிறார் என்றான்.

வழக்கம் போல இதைக்கேட்ட தந்தையும் மகனும் என்னசெய்வதென்று சிந்தித்தபடியே இருவரும் ஒரு சேர கழுதைமேல் ஏறிக்கொண்டனர். இனி இந்த உலகம் தங்களைப் பார்த்துக் கேலிப் பேசாது என்று தந்தையும் மகனும் மனதில் எண்ணிக்கொண்டனர்.

கொஞ்ச தூரம் சென்றபின் இன்னொரு வழிப்போக்கன் இவர்களைப் பார்த்து இரண்டு தடியன்கள், ஒரு நோஞ்சான் கழுதையின் மேல் ஏறி சவாரி செய்கிறார்கள்; இரக்கங்கெட்ட ஆட்கள்! என்று காட்டமாக விமர்ச்சித்தான்.

இதைக் கேட்டு வருந்திய தந்தையும், மகனும் கழுதையிலிருந்து குதித்தனர். இனி என்ன செய்வது? தீவிரமாக சிந்தித்தனர். நீண்ட ஆலோசனைக்குப் பிறகு மக்கள் மனம் மகிழ கழுதையை நாம் கட்டித் தோளில் சுமந்து செல்வோம்! என்று முடிவு செய்தனர்.

அவ்வாறு கழுதையைத் தோளில் சுமந்து செல்கையில் வழியில் ஒரு காட்டாறு குறுக்கிட்டது. அதைக் கடக்கையில் கழுதை மிரண்டு போய் வெள்ளத்தில் விழுந்தது. கால்கள் கட்டப்பட்டிருந்ததால் அதனால் நீந்த முடியவில்லை, பரிதாபம்! அது ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. தந்தையும் மகனும் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

அன்பு தம்பி தங்கச்சி, கதை சுவாரசியமாக இருந்ததா? நீங்களும் கூட இதுபோன்ற விமர்சனம் பண்ணுகிறவங்களை சந்தித்திருக்கலாம். நாம் என்ன பண்ணினாலும் அல்லது எதைச் செய்தாலும் வித விதமாய் யோசித்து விமர்சனம் பண்ணிக்கொண்டே இருப்பாங்க. இதனால் பாதிக்கப்படும் நாமும் நம்முடைய நோக்கத்தையும் இலட்சியத்தையும் மறந்து, அவர்களை பிரியப்படுத்துவதற்காக நம்முடைய நல்ல எண்ணங்களையும், பழக்க வழக்கங்களையும் குணாதிசயங்களையும் புதைத்து போடுகிறோம் அப்படித்தானே!

நம்முடைய குறைகளை சுட்டிக்காட்டவும், சீர்படுத்தவும் தேவன் நமக்கு நல்ல பெற்றோரையும் அழகான குடும்பத்தையும் தந்திருக்கிறார். மேலும் நாம் சகலவிதத்திலும் வளர நல்ல திருச்சபையை, உண்மையான நண்பர்களை, தரமான ஆசிரியர்களையும் தந்திருக்கிறார். இத்தகைய நபர்கள் உங்கள் மீது உண்மையான அன்பு செலுத்தி, நீங்கள் வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனும் எதை செய்ய வேண்டும், எப்படி செய்ய வேண்டும், எப்பொழுது செய்ய வேண்டும் என நல்ல ஆலோசனைகளை தருவதோடு, தவறு செய்யும்போது உங்களை கண்டித்து, எச்சரித்து நல்வழிப்படுத்துவார்கள். இவர்களது விமர்சனங்களிலும் ஆலோசனைகளிலும் உண்மையான அன்பும், உயரிய கரிசனையும் இருக்கும். இப்படிப்பட்டவர்களை தேவன் உங்கள் வாழ்க்கையும் தந்தமைக்காக நீங்கள் தேவனுக்கு நன்றி கூற வேண்டும்.

ஆனால் முன்பின் தெரியாதவர்கள், நேற்று பழகியவர்கள் அல்லது ஏதோ ஒரு தேவைக்காக உங்களிடம் வந்து ஒட்டிக்கொண்டவர்கள், நோக்கமின்றி வாழ்கிறவர்கள் போன்றவர்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் பல தருணங்களில் ஆபத்தானதாகும். இப்படிப்பட்டவர்களின் வார்த்தைகளினால் நீங்கள் சோர்ந்து விடாதிருங்கள். இப்படிப்பட்டவர்களை உங்களால் திருத்த இயலாது, அவர்களது கேலி கிண்டல்களை உதறித்தள்ளுங்கள். இலக்கினை நோக்கி பயணிக்கும் உங்களது நேரம் பொன்னானது. இத்தகையவர்களுக்காக நேரத்தை வீணாக்கிவிடாதிருங்கள். நீங்கள் தொடர்ந்து முன்னேறுங்கள். எல்லாரையும் பிரியப்படுத்த முயற்சித்தால் நாம் நமது வாழ்க்கையில் தோற்றுப்போய் விடுவோம். அடுத்தவரின் வாழ்க்கையோடு உங்கள் வாழ்க்கையை ஒப்பிட்டு சோர்ந்து போகாதிருங்கள். உங்கள் இலட்சியத்தில் தேவ துணையோடும், ஆவிக்குரிய ஆலோசனைகளோடும் தொடர்ந்து பயணம் செய்யுங்கள். முயல் வேகம் நம்மிடம் இல்லையென்றாலும் ஆமை வேகத்திலாவது நகர்ந்து இலட்சியத்தை அடைய தீர்மானிப்போம். எந்த சூழ்நிலையிலும் உங்கள் ஓட்டத்தை நிறுத்த அல்லது திசைமாற இணங்கிவிடாதிருங்கள். நன்றி

**மனன வசனங்கள்:** இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப்பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே (கலாத்தியர் 1:10).

ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமா யிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்(எபிரெயர் 12:1).

இந்த பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 9750381784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.. அடுத்த இதழில் மற்றொரு சிறுகதையுடன் உங்களை மறுபடியும் சந்திக்கிறேன்.. டாட்டா...



# YOU ARE A WINNER

**Rev. பெகின் சாமுவேல்**

இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இதழ் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

பிள்ளைகளெல்லாரும் தேர்வுக்காக ஆயத்தமாகிக்கொண்டிருக்கும் முக்கியமான நாட்கள் இது. பிள்ளைகளும் பெற்றோர்களும் ஒருவிதமான படபடப்புக்குள்ளும், அழுத்தத்துக்குள்ளும் இருக்கும் நேரம். Exam என்பதற்கு Extreme Academic Mental Stress என்று கூட சொல்லலாம். இந்த Stress உங்களை மேற்கொள்ள விடாதிருங்கள். உங்களை உடலளவில், மனதளவில், அறிவு ரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் இந்த பரீட்சைகளை எதிர்கொள்ள தயார்படுத்திக்கொள்ளுங்கள். வேதத்தில் பார்த்தால் சிலர் தேவனால் பரீட்சிக்கப்பட்டார்கள். அதில் சிலர் ஜெயித்தார்கள். சிலர் தோற்றுப்போனார்கள். தானியேலும் அவனுடைய மூன்று நண்பர்களும், ஆபிரகாம், இயேசு கிறிஸ்து இவர்களெல்லாம் தங்களுக்கு நேரிட்ட சோதனைகளில் ஜெயித்தவர்களாய் காணப்பட்டார்கள். ஆனால் யூதாஸ்காரியோத்து, அனனியா சப்பீராள், சிம்சோன் போன்றோர் சோதனை நேரிட்டபோது அதை அவர்களால் ஜெயிக்க முடியாமல் தோற்றுப்போனார்கள். அன்பானவர்களே, நீங்கள் வாழ்வில், உங்கள் தேர்வில் வெற்றியடைய விரும்புவீர்களென்றால் சில காரியங்களை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். வேதம் சொல்லுகிறது.

உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார் (உபா.28:1).

நாம் என்ன செய்ய வேண்டும்?

## Include God-Do not exclude Him:

தேர்வு நாட்களில் பொதுவாக நாம் நேரத்தை வீணடிக்க விரும்ப மாட்டோம். கடைசி நேர ஆயத்தங்களில் மிக மும்முரமாக இருக்கும்போது நாம் சில காரியங்களை நம்மைவிட்டு தள்ளி வைப்போம். துரதிர்ஷ்டவசமாக அதில் முதலாவது அநேகரால் தள்ளி வைக்கப்படுவது தேவனுக்கடுத்த காரியங்கள்தான். வேதத்தை வாசிக்க ஜெபிக்க செலவழித்த நேரத்தை குறைக்கிறார்கள். அல்லது நேரத்தை செலவழிப்பதே இல்லை. அவர்கள் எண்ணத்தில் தேவனையோ, சபைக்குரிய காரியங்களையோ தேர்வுக்கு பின் பார்த்துக் கொள்ளலாம். இந்த நாட்களில் அதில் நேரத்தை செலவழிப்பது அவர்களை பொறுத்தமட்டும் முக்கியமானது இல்லை என்பதுதான். ஒன்றை புரிந்து கொள்ளுங்கள். கர்த்தரை தள்ளி வைத்துவிட்டு நம்மால் எந்த காரியத்திலும் வெற்றி பெற முடியாது. நீங்கள் படிக்க ஆரம்பிக்குமுன் முதலாவது செய்ய வேண்டிய காரியம் என்னவென்றால், வேதத்தை வாசித்து, ஜெபித்து ஆரம்பியுங்கள். நீங்கள் படிக்க திட்டமிடும்போது உங்கள் சபையின் ஆராதனைகளுக்கு நீங்கள் செல்ல வேண்டிய நேரத்தை விட்டு விட்டு திட்டமிடுங்கள்.

அது நாம் தேவனுக்கு கொடுக்க வேண்டிய நேரம். பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் தேர்வு நாட்களில் சபை ஆராதனைகளை தவற விடுவதை ஒருக்காலும் அனுமதிக்காதீர்கள்.

## Trust God:

உங்கள் நம்பிக்கையை தேவன்மேல் வையுங்கள். உங்கள் படிப்போ, திறமையோ உங்களை வெற்றியடைய செய்வதில்லை. தேவனுடைய கிருபையும், தயவுமே நம்மை வெற்றியடைய செய்யும். சங்கீதத்தில் வாசிக்கிறோம். உம்முடைய காருண்யம் என்னை பெரியவனாக்கும் (சங்.18:35). தேவன் எனக்காய் யாவும் செய்வார், என்னோடு இருக்கிறார் என்ற நம்பிக்கை இல்லாதவர்கள் வாழ்வில் தான் குழப்பங்களும், பயங்களும், சந்தேகங்களும் எழும்பும். நீங்கள் சரியாய் ஆயத்தமாகி, தேவனை நம்புவீர்களானால் அவர் உங்களை நேர்த்தியாய் அவருடைய பாதையில் நடத்தி செல்வார். சிலருடைய மனதில் இந்த கடினமான நாட்களை நான் எப்படி கடக்க போகிறேன்? என்னால் வெற்றியை சுதந்தரித்துக் கொள்ளமுடியுமா? என்ற கேள்விகளோடு இருந்தால் உங்களை உற்சாகப்படுத்து கிறேன். உங்களால் முடியாது என்கிற காரியங்களை தேவனிடத்தில் கொடுங்கள். அவருடைய துணையோடு உங்களால் எளிதில் வெற்றிபெற முடியும். உங்கள் நம்பிக்கையை கர்த்தர் மேல் வையுங்கள். தேவனால் இது கூடாததல்ல. தேவனால் எல்லாம் கூடும் (மாற்கு 10:27).

அன்பானவர்களே, இந்த வருட விடுமுறை நாட்களில் நடைபெற இருக்கும் AGVBSக்கான பாடத்திட்டங்களுடன் நாங்கள் உங்களை விரைவில் சந்திக்க இருக்கிறோம். அதைக் குறித்த முழு விபரங்களை உங்கள் சபை போதகரிடமோ, மண்டல சிறுவர் ஊழியரிடமோ கேட்டு தெரிந்து கொள்ளுங்கள். இந்த ஊழியங்களுக்காக நீங்கள் ஜெபித்துக்கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

## போட்டி எண் : 3 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை**:மேரி; கிரிஜா; ரமணி; E.கலா; அன்னைமேரி; சாராள் (வே.பு); ராதாமணி; புஷ்பவல்லி; மஞ்சு; தங்கமணி; ஜெயசிலின்; விஜிராஜா; மயில்; S.முத்துலெட்சுமி; ராணி பிளசிங்; கிறிஸ்டி; பிரேமலதா; இந்திராகுமார்; பிரியா; பூங்கோதை ; சுமதி ஜோசப்; ஞானகுரு; கலைவாணி; கோகிலா; மரகதம்; A.லதா; எஸ்தர் (அச்.பு); மாது; குளோரி; சித்ரா பிளஸ்சி; முத்துகோபால்; T.கலா; அன்னாள்; இவாஞ்சலின்; பிரபா; T.ஜெபா ;|**திருநின்றவூர்**: K.மார்த்தாள்; பாத்திமா மேரி; ஏஞ்சலின் ஜெனிஸ்; மாலதி; தெரசா; சரண்யா; அனுலா; ஏடா டாரியா; அமலா; ஹில்டா; ஷீபா ரென்ஸ்; எழிலரசி; லீலா பரணி; வின்சி ;|**ஆறுமுகநேரி:** செல்வ பிரியா; அனன்சி அருண்; நிவேதா; வெண்ணிலா எஸ்தர்; முத்து; கிரேஸி; பிரெய்சி; ரோஸ்லின்; ஜாய்ஸ் மேரி; ஜோதி மீனா; அன்சி ரத்னம்;| **நாமக்கல்**: காயத்ரி பிரியா; நிமலா; |**இறச்சகுளம்**: எஸ்தர்; காயத்ரி; கனகமணி; சிவதர்ஷினி; ரேணுகா ரூபன்; மகிழ் ஜெயந்தி; ராதிகா; ஷாலினி; கலா; ஜெஸ்மின்; ஷோபா ;| **ஸ்ரீவில்லிபுத்தூர்**: நித்யா; அழகு நாச்சியார்; காபிரியேல்; பாஞ்சாலி; மெசி; குளோரி; சத்யா; நெல்சன் செல்வராஜ்; அபிராமி ஜாஷ்வா; எஸ்தர் யோசுவா; எஸ்தர் இந்திரா; மாதவி; |**கொட்டிவாக்கம்** : அமுதவல்லி; பிளஸ்சி; ரஞ்சிதா; முல்லை; அஞ்சலி; அகஸ்டினா மதினா; எஸ்தர் விஜயராணி |**கடையநல்லூர்**: ஆஷாதேவி; வினோலியா; செல்வி இந்திராணி; வேணி; விக்டோரியா; | **நெல்வாய்**: அருணா; தேன்மொழி; மலர்விழி; கற்பகம்; ஆர்த்தி; கலையரசி; பொக்கிஷராணி; அன்பரசி; சரவணன்; மேத்யூதருண்; நர்மதா; அமலா; | **உடுமலைப்பேட்டை**: கிரேஸி; பிரிஸ்கில்லா;

## போட்டி எண் : 3 (சரியான விடை எழுதியவர்கள்)...

பிரியா; சுகந்தி; ஏசையன்; |**ஆண்டிபட்டி**: தபீத்தாள் ராணி; புளோரியா; மேரி; தேவபாக்கியம்; S.அன்னாள்; |**அச்சிறுப்பாக்கம்**: சிலம்பரசன்; தமிழ்ச்செல்வி; செல்வகுமாரி; விஷ்னு பிரியா; | **ஒட்டப்பிடாரம்**: பானுமதி; ஞானவடிவு; சரஸ்வதி; | **புளியங்குடி** : ஜெயமணி; ஜெப ஞானம்; சுந்தரி;|**திரேஸ்புரம்**: சில்வெஸ்டர்; புருசீமா; பெனியூசியா; | **மதுரை**: கலைச்செல்வி; அனிதா; ஜெயா; பொன்மேரி; |**K.T.C.நகர்**: ஜாய் ஹெப்சிபா; ஹெரின்; பிரேமாரூத்; ஷில்வியா கிறிஸ்டோபர்; புஷ்பராணி; | **மடத்துக்குளம்**: ரூத்; ஸ்டெல்லா மேரி; பரிமளா; கிரேஸ்மேரி; சரண்யா;|**மூலைக்கரைப்பெட்டி**: ஜெபனேசர் மோசஸ்; பிரிஸ்கில்லா; தமிழ்ச்செல்வி; |**பெருங்குளம்**: பியூலா; ஜெயலின்சிங்; ஏஞ்சல்; |**சொக்கன்குடியிருப்பு** : ஜான்சி ராணி; மேரி ஜெயபாஸ்கர்; |**நாசரேத்**: மகாலெட்சுமி; எஸ்தர்; பொன்மணி; தாசன் மோசஸ்; மெர்சி; |**நசியனூர்** : ஹேமலதா; |**மூக்குப்பீறி**: செல்லத்தாய் ராணி; | **பெரியகுளம்**; மனோகாசிராஜ்; |**கோவில்பட்டி**: இராகேல்: மரியாள் ஜெயசீலி; நேசமணி; | **அரசரடி**: எஸ்தர் ஜெயமீனா; | **ஆம்பூர்**: கிரிஜா சத்தியா; ரூபி மனோகரன்; | **சேத்துப்பட்டு** : பெர்சியாள் செல்வி; ஷாலினி; அமலசெல்வி; ரேணுகா; மரகதம்; |**கிருஷ்ணகிரி**: ரேச்சல் அனுஷியா; விஜயா; மரிலா; |**வெண்ணாம்பட்டி**: ஹெப்சிபா;|**தர்மபுரி**: ரூத்; ஜாஸ்மின் அ.மாதம்மாள்; | **சேலம்**: பெட்ரீஷியா டேவிட்; |**கல்லுக்குறி**: W.டால்டன்; | **வீரபாண்டிய பட்டணம்**: சுகிர்தா டைட்டஸ்; | **வத்ராப்**:ஜெபராணி; தர்ஷினி; | **திருச்சி**: ஷர்லி; சாந்தி; ஆனந்தன்; | **வேலாயுதப்பாளையம்**: ஜெயமணி; |**வளசரவாக்கம்**: நிர்மலா எஸ்தர்; ஜெபசெல்வி தனராஜ்; |**சென்னை** : மேரிகுட்டி; மெர்லின் ஹெலன் பிரிதியா; ரேகா அற்புதராஜ்; |**தேனி**: கிருபா; செண்பக புஷ்பா ஜேம்ஸ்; திரவியச்செல்வி; தனம்;|**நாகமலை**: விஜிலா; |**திருப்பூர்**: எட்வர்ட்; |**ஆத்தூர்**: லில்லி; ரெமில்டா; தேவி; பிளாரன்ஸ்; | **ஆல்வார்குறிச்சி**: ஹரிலீலா;|**ஓசூர்**: ஜெமிந்தா; பரிமளா; |**பாண்டிச்சேரி**: புரோனிக்கா; |**நெய்யூர்**: ஷீலா ராபர்ட்;|**ஆவடி**: சந்திரா சாலமோன்ராஜ்; |**சூளைமேடு**: பூங்கனி: அருள்மேரி; |**பாளையம்கோட்டை**: சாந்தகுமாரி; |**செம்பாக்கம்**: மரகதலீதா; |**திருக்கோவிலூர்**: லஷ்மிதேவி; |**பழனி**: பிரீத்தி; சாந்தி; |**மதுராந்தகம்**: சாந்தி; சுனிதா ரோஸ்லின்; |**கணக்கப்பிள்ளை வலசை**: A.P.சீலி; |**புதுக்கோட்டை**: லலிதா; |**போர்ட் பிளேர்**: சலோமி; விஜய்; | **கள்ளக்குறிச்சி**: வசந்தி இராஜகுமாரி; | **ஆட்டையாம்பட்டி**: சத்யா; சுமதி;|**அஸ்தம்பட்டி**: நேசம்; |**புது ஆயக்குடி**: மாரியம்மாள்: |**கூத்தாநல்லூர்**: கிளமாண்டின்; பாஸ்டியன்;|**களக்காடு**: ரெக்ஸின்; ஜெயமெர்சி;|**கீழ்வேளூர்**: கிரேனாப்பு; |**கிச்சிப்பாளையம்**: விஜய்; |**வில்லுக்குறி**: கிருஷ்ணகுமாரி; | **எடப்பாடி** : ஜோஸ் P.மேரி; | **கடாட்சபுரம்**: சுசிலா; ரேவதி கில்பர்ட்; | **காட்பாடி**: டெய்சி ஜோசப்; | **கட்டபெட்டு**: புஸ்பமாலா; |**கூடன்குளம்**: சுரேஷ்; | **அகஸ்தியர்பட்டி**: நிர்மலா; | **வில்லிவாக்கம்**: சாராள் மேக்டலின்; | **அரும்பாக்கம்**: மேரி; ஆட்லின் பெமி;|**குரோம்பேட்டை**: கோமதிகுமார்; |**திண்டிவனம்**: சாராள் அறிவுச்செல்வி; |**போளூர்**: செல்வி ஜான்சன்;| **அயன்சிங்கம்பட்டி**: சுசிலா மேரி; | **கம்பம்**: ஜோதிமணி; |**திருவெறும்பூர்**: தேவதாஸ் செல்வகுமார்; |**திண்டுக்கல்**: லதா; |**கிராப்பட்டி**: புளோரா அருணா; |**பழையகாயில்**: எலிசபெத்; கிருபா பிளஸ்சி; |**காசிமேஜர்புரம்**: ரூத்; | **சிட்லபாக்கம்**: ரெபெக்காள்; |**திருவள்ளூர்**: சுரேஷ்பாபு; |**பள்ளிக்கரனை** : புவனேஸ்வரி; ஜோதி மகிமைதாஸ்; | **இரவண சமுத்திரம்**: அஜிதா; |**புதுச்சேரி**: எஸ்தர் சுரேஷ்; |**பரமத்திவேலூர்**: பியூலா; |**இராமன்புதூர்**: லீதியாள்; ஜான்சிராணி; அன்னம்மாள்; |**கற்குடி**: தனபாக்கியம்; |**திருச்செந்தூர்**: தேவதாஸ்; |**ஆலங்குளம்** : ஸ்டெல்லா மேரி; |**ஏழாயிரம் பண்ணை**: செல்வமலர்; விக்னேஷ்; | **தேவகோட்டை**: மேரி ராபின்; |**வடசேரி**: கிறிஸ்டி; |**வடமதுரை**: வசுந்தரா தேவி; |**பெங்களூர்**: தேவபிரியா; |**சுரண்டை**: குளோரி ஞானம்; |**முகூரி**: பிரின்ஸி சாம்சேகர்; |**கோயம்புத்தூர்**: கிறிஸ்டினா அபிகாயில்; மேரி டென்சில்; |**சின்னாளபட்டி**: சரண்யா; சலோமி; | **பாவூர்சத்திரம்**: ஜெசிலி: |**பசுவந்தனை**: கிருபா ஷைலிகா; |**பெருந்துறை**: கெத்சியாள்; |**புஞ்சை புளியம்பட்டி**; சௌந்தர்யா;| **திருக்கழுக்குன்றம்**: உமா தேவ ஜோதி.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் -4
## (யாத்திராகமம் 21-40) அதிகாரங்கள்)
## (இருப்பிடத்துடன் விடையை மட்டும் எழுதவும்)

1. ----------- நடுவே நான் வாசம்பண்ணி ----------- தேவனாயிருப்பேன்.
2. ----------- காண்பிக்கப்பட்ட ----------- அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு.
3. ----------- திரளானபேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக.
4. ----------- ஒரு தூபபீடத்தையும் ----------- மரத்தினால் உண்டாக்குவாயாக.
5. ----------- கண் ----------- பல் ----------- கை ----------- கால்.
6. ----------- சாட்சிப்பெட்டியின்மீதில் ----------- வைப்பாயாக.
7. ------------- ஓரங்களில் சுற்றிலும் ஒரு ------------- ஒரு ----------- ஒரு ----------- ஒரு ----------- தொங்குவதாக.
8. ----------- சீனாய் மலையின்மேல் தங்கியிருந்தது.
9. ----------- கீழ்ப்பக்கத்தின் பிரகாரம் ----------- அகலமாயிருக்க வேண்டும்.
10. ----------- தூஷியாமலும் ----------- சபியாமலும் இருப்பாயாக,
11. சுற்றுப்பிரகாரத்துத் தொங்குதிரைகளெல்லாம் மெல்லிய -----------
12. வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்களை -----------
13. ஓய்வுநாளில் வேலை செய்கிறவன் எவனும் -----------
14. கர்த்தருடைய மகிமை -----------
15. வாசஸ்தலத்துக்கு நிமிர்ந்து நிற்கும் பலகைகளையும் -----------
16. எனக்கு விரோதமாய்ப் பாவம் செய்தவன் எவனோ அவன் பேரை என் புஸ்தகத்திலிருந்து -----------
17. கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் -----------
18. தங்கள் இருதயத்தில் உற்சாகமடைந்த ஸ்திரீ புருஷர் யாருவம் கர்த்தருக்குக் காணிக்கையை -----------
19. சீத்திம் மரத்தால் அந்தத் தண்டுகளைச் செய்து அவைகளை -----------
20. ஒரு மனுஷனும் என்னைக் கண்டு -----------

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.04.2024



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**


**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## மதுரை பிராந்திய புத்தாண்டு ஆசீர்வாத பெருவிழா AGTBC வளாகம், ஜனவரி 7









## விருதுநகர் மற்றும் திருச்சி மத்திய மண்டல உபவாச ஜெப கூடுகைகள்-ஜனவரி 26









## திருச்சி பிராந்திய போதகர்கள் துணைவியர் கூடுகை-பிப்ரவரி 21







தேனி JESUS ECHO ஏ.ஜி. சபையின் புதுப்பிக்கப்பட்ட ஆலய கட்டிட பிரதிஷ்டை










AGCM presents

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்



AGVBS'24

Dheepam

For more information: 98846 99087

பிள்ளைகளே, ஆயத்தப்படுங்கள்!
பங்குபெறுங்கள்! ஆசீர்வதிக்கப்படுங்கள்!!

BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664